# அமிர்தவசனி

தெய்வீக மாதப் பத்திரிகை


| | | |
|---|---|---|
| மலர்: 9<br>இதழ்: 12<br>விலை 25 ந.பை | ஹேவிளம்பி ௵ பங்குனி ௴<br>மார்ச்—ஏப்ரல் '58 | வருட<br>சந்தா<br>ரு. 2-4-0 |


—Page – 573—



பாசம் அகன்று பாலரை யரிந்த பக்தர் சிறுத்தொண்டர்,
தம் அன்புக் குடும்பத்துடன் அருள் பெறல்

பெரியபுராணச் சித்திர விளக்கம் 48; பக்கம் 565

ACC. NO. 18582

# உள்பொருள்

பக்கம்

1. தள்ளுவது தாளம், தள்ளப்படுவது காலம் (திருப்புகழ் மணி) ... 529
2. ஆநந்தர் (ரஸபதி) ... 531
3. முனிவர் காட்டிய முதல்வன் (சி. குமாரஸ்வாமி) ... 540
4. அவருக்கென்ன குறைச்சல் (திருப்புகழ் அரசு வெங்கட்ராவ்) ... 544
5. உபநிஷதங்களின் உள்ளொளி (விஜயலக்ஷ்மி) ... 547
6. ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி (திருப்புகழ் சதுரர் சே.த. இராமலிங்கம் பிள்ளை B.A.B.T.) 554
7. சக மாயை (கி. வா. ஜகந்நாதன்) ... 556
8. சோமநாதன் மடம் திருப்புகழ் விரிவுரை (குகஸ்ரீ) ... 559
9. சிறுத்தொண்ட நாயனுர் (கி. வா. ஜ.) ... 565
10. "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே" (மா. பொ. தியாகராசன் B.A.) ... 573
11. Divinity in Poetry (*Thiruppugal Mani*) ... 575

## அமிர்தவசனி சந்தாநாரர்கட்கு வேண்டுகோள்

சித்திரை மீ முதல் பங்குனி மீ முடிய வருடச் சந்தா உள் நாட்டிற்கு ரூ. 2—4—0 (2-25) முன்னதாக அனுப்பவும். வி. பி. இல்லை.

இலங்கைக்கு நான்கு வருடச் சந்தா வி. பி. தபால் செலவு உள்பட ரூ. 10—0—0.

மலேயா, ஆப்பிரிக்கா, மற்ற நாடுகளுக்கு நான்கு வருட சந்தா இருபது ஷில்லிங்குகள். போஸ்டல் ஆர்டராக அனுப்பவும்.

சித்திரை மாதத்திற்கு முன்னதாகவே சந்தாத் தொகையை அனுப்பினுல் தொடர்ந்து பத்திரிகை கிடைக்கும். வருட நடுவில் சந்தாச் செலுத்தினுல், சித்திரைமீ முதல் வந்த முன் இதழ்கள் கிடைக்கக் கூடியதை உத்தேசித்து சந்தாத் தொகையை பெற்றுக் கொள்ளவோ, மறுக்கவோ நேரும்.

அமிர்தவசனி 54, பந்தர் தெரு, சென்னை.

குறிப்பு: முந்திய இதழ்களின் வருடத் தொகுப்புகள் 3—6—0 வீதம் கிடைக்கும். சில பிரதிகளே கைவசம் உள. தபால் செலவு ரூ. 1

A011-78 575 1-624
1138-18582

அமிர்தவசனி
தெய்வீக மாதப்பத்திரிகை
ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

மலர் 9 | ஹேவிளம்பி ஞூ பங்குனி மீ மார்ச்-ஏப்ரல்—1958 | இதழ் 12

# தள்ளுவது தாளம், தள்ளப்படுவது காலம்

(திருப்புகழ் மணி)

காலவெள்ளம் ஜீவராசிகளை சமுசார வெள்ளத்தில் அடித்துச் செல்லுகிறது. காலத்தை வெல்வதெப்படி? ஆற்றைத் தாண்டுவதற்குப் படகில் ஏறிச் செல்வதெப்படியோ அப்படியேதான். படகை ஆற்றுவெள்ளம் அடித்துக்கொண்டே சென்றுவிடும். ஓடும் தண்ணீரைத் துடுப்பினால் இருபக்கமும் தள்ளித் தள்ளி அடித்து அடித்து ஜல ஓட்டத்தின் எதிர்முகமாகக் கொண்டுபோய் விடுகின்றார்கள். அதுபோல் காலவெள்ளத்தைத் தள்ளித் தள்ளி எதிர்நோக்கி முன்னே போவதற்குத் துடுப்பினால் அடித்துத் தள்ளித் தள்ளி முன்னேற்றம் அடையவேண்டும். இப்படி காலத்தைத் தள்ளுவதுதான் தாளம். மேலும் காலவெள்ளத்தைத் தள்ளும் துடுப்புதான் சந்தம்—சந்தத் திருப்புகழ்.

அமைதிபெற காலப் போக்கை எதிர்த்துச் சென்று அங்கே காணப்படும் ஆனந்த வெள்ளத்தை அடைவதே மோக்ஷம். வாழ்வானது, ஆனந்த ஸாகரமான

---

மனம்போல வாழ்வென்னும் வாய்மையுள நல்லோர்
இனஞ்சார்ந்து வாழ இறைவா அருளுதியோ.

ஆதிக்கும், ஸம்ஸார துன்ப சமுத்திரமான முடிவுக்கும், நடுவே நிற்கும் ஒரு பிணைப்பு. காலத்தை எதிர்த்துச் செல்வார் ஆனந்த ஸாகரத்தில் நித்ய பேரின்பத்தில் வாழ்வர். காலத்தோடு அதையே பற்றிச் செல்பவர் ஸம்சார துன்ப ஸாகரத்தில் வீழ்ந்து உழல்வர். நாம ஸங்கீர்த்தனம் என்ற துடுப்பால் தள்ளி, தாளத்தால் காலத்தை எதிர்த்துச் சென்று, வெற்றி பெறுவர் சிவயோகிகள். தள்ளுவது தாளம், தள்ளப்படுவது காலம். விதியைத் தள்ளுவது தாளம், கெதியைக் கூட்டுவது நாமம்.

*நீலச் சிகண்டியில் ஏறும்பிரான் எந்த நேரத்திலும்*
*கோலக் குறத்தியுடன் வருவான் குருநாதன் சொன்ன*
*சீலத்தை மெள்ளத் தெளிந் தறிவார் சிவயோகிகளே*
*காலத்தை வென் றிருப்பார் மரிப்பார் வெறும் கர்மிகளே,*

என்பது கந்தரலங்காரம்.

இதனால் போதித்த உண்மை யாது?

காலத்தை வெல்பவர் சிவயோகிகள் என்றால், காலத்தை வெல்லும்வகை எப்படியோ? அகஸ்தியர்,

> " ஷண்முக நாயகன் தோன்றிடுவான்
> சத்குரு நாயகன் தோன்றிடுவான்
> கண்களினால் கண்டு போற்றிடலாம்
> கொடும் காலத்தைக் காலனை மாற்றிடலாம் "

என்று உபதேசித்தார். முருகனைக் காணக் கிடைக்க வேண்டுமே; முருகன் தோன்றிவிட்டால்,

> " நாளென்செயும் வினைதான் என்செயும்
> எனைநாடி வந்த கோளென்செயும்
> கொடும்கூற்றும் என்செயும் "

என்றார் அருணகிரியார். ஆதலால், காலனை வெல்வதற்கு முருகன் காட்சியே உபாயம். அவன் காட்சி

---

வயதிற்குத் தக்கமதி வாய்க்காமல் ஏய்ப்பிக்கும்
கயமை புறங்காட்டக் கண்ணருள்செய் எம்மானே.

நமக்கு ஏற்படுவதற்குச் சுலபமான வழி நாம சங்கீர்த்தனம். "வழிதான் என்ன?" "ஞானம் தரும் தென்றல் காற்றினிலே, ஷண்முக நாயகன் தோன்றிடுவான்" என்பது அகஸ்தியர் உபதேசம்.

காலம் நம்மை யளந்து விடுகிறது. நாம் அதற்கு அடிமைப் படாமல் காலத்தை அளந்து விட்டால் காலத்தின் வெற்றி நமதல்லவோ? தமிழ்த் துறையில் சந்தங்களும், சங்கீதத் துறையில் தாளங்களும் காலத்தை அளக்கும் கருவிகள். பண்ணுடன் கலந்து பாடுங்கால் காலம் அளக்கப் படுகின்றது. நம்மைக் காலம் தள்ளிவிடும் பான்மைகெட, தாளத்தால் நாம் நாம ஸங்கீர்த்தன நிகழ்ச்சியில் காலத்தைத் தள்ளி விடுகிறோம். ஆகவே நாம ஸங்கீர்த்தனம் செய்யவும், ஜாலராவில் காலத்தைத் தள்ளவும், தள்ளித் தள்ளி சப்தப்ரம்ம பேரானந்த ஸாகரத்தில் அமர்ந்து நின்றிடலாம். நித்திய ஆனந்தம் பெற்றிடலாம். பேரின்ப வாழ்வில் உகந்திடலாம். முருகா! முருகா!

**தேவி தாஸர்கள்—24**

# ஆநந்தர்

(ரசபதி)

வியாசர் புதல்வர் சுகர். அவர்க்கு நலம் சிறந்த உபநயனம் நடந்தது. பேரொன பிரம தேஜஸ் பிறந்தது. ஓதத் தக்க ஆரம்ப நூல்களைத் தந்தையிடம் உணர்ந்தார். உணர்வில் தெளிவு உதித்தது. அதன் பின் பிரகஸ்பதி, அவர்க்கு ஆசிரியர் ஆயினர்.

குருகுல வாசம் செய்த சுகர்க்கு, வேத நூற்கள் விளங்கின. தர்ம சாஸ்திரங்களை அறிந்தார். குருகாணிக்கை கொடுத்தார். அதன் பின் மைந்தர், தந்தையிடம் வந்தார். வேத வேதியர், அருங் கலை வாணர், தர்ம ரட்சகர் என விளங்கிய மைந்தரை, தந்தை மகிழ்ந்து தழுவினர்.

---

அன்பர் சிவமாவர் என்றுரைத்த ஆக்கத்தை
என்றுமிந்த ஏழையகம் எண்ணிநிற்பச் செய்வாயோ.

சுகா! பிரமசர்யம் போதும். இனி மங்கை ஒருத்தியை மணம் செய்து வைக்கிறேன். இல்லற நல்லறத்தை ஏற்றுக்கொள்! தகுதியுடைய அதுதான் தருமம்.

எந்தையே! அவசரம் வேண்டா. ஆகும் நெறி எது? ஆகா நெறி எது? அமைதியாக ஆலோசித்துச் சொல்லும்!

குழந்தாய்! அருந்தவம் செய்தேன். பேறு தரும் உன்னைப் பெற்றேன். புனித மனையறம் நடத்தப் பொருள் வேண்டும் அல்லவா! அரசர்களை அணுகுவேன். தானம் பலவாங்கித் தருவேன். அதுகொண்டு, நல்லற இல்லறத்தை நடத்து!

சிறந்த சுகர் விழிகள், நீரைச் சிந்தின. விவரம் அறியாத வியாசர் விழித்தார். அப்பா! உலகை உணர்கிறேன். சுகமாயிருக்கிறேன் என்று, எவரும் சொல்லக் கேட்டிலேன். சுகம்போல் தோற்றுவன எல்லாம், அவர்கட்கு ஆறாத துயரத்தையே அளிக்கின்றன.

ஆணிற்குப் பெண் அடிமை யென்பது, வெறும் பேச்சு. அவட்கு அவன்தான் அடிமை. ஊன்றி உணர்ந்தால், இதுதான் உண்மை.

புத்திர பௌத்திரர் எனும் வீணான விலங்கால், மணந்தவன் மனத்தை இறுக்கி நெருக்குவள் அந்த ஏழை.

"மச்ச மெச்சு சூத்ரம்
ரத்த பித்த மூத்ரம்
வைச்சி றைச்ச பாத்ரம்"

ஐயோ அப்பா! இதுதான மனிதர்கள பெற்ற மகிமை. இச்சிலையில், ஆணும் பெண்ணுமான ஈருடல் தொடர்பில், என்ன அப்பா இன்பம்? பயனான நூல்களைப் படித்தேன். ஆத்ம சுகத்தை அடைய வேண்டும் என்றே அவைகள் அறிவிக்கின்றன. வாழ்க்கைத் துன்பத்தில், புழுவாயிருந்து நெளிந்து புரள வேண்டும் என்று அவைகள் போதிக்கவில்லை.

கை கொடுக்க வேண்டிய தாங்கள், காமக் கடலாழம் காணச் சொல்கிறீர்; குருவா யிருந்த பிரகஸ்பதியோ, மோசமான சம்சாரத்தில் மூழ்கி யிருக்கிறார். காணும் உங்கள் துணையால், நான் கரையேற வழியில்லை. மாபெரும் பிணியால் வருந்தும் மருத்துவர், மற்றவர் நோயை எங்ஙனம் மாற்ற முடியும்?

---

என்ன இஃதென்றென்னை ஏவர் மறுத்தாலும்
மன்னடியர் தாள்பணியும் மாமதிதந் தாளுதியோ.

குருவேனும், என் முத்தி விருப்பறிந்து, உரிய நிலையளவு ஓதினார். உம்மைப் போல், தொல்லை இல்லறத்தைத் தொட்டுக் கொள என்று, உறுத்தி வலித்து உரைத்திலர். அந்நிலையில், உம்மைவிட அவர் உயர்ந்தவர்,

அப்பா! ஐயோ அப்பா! இல்லறப் பாம்பின் வாய்க்கு என்னை இரையாக்க வேண்டா!

சூரிய சந்திரர்கள், ஓயாது இரவிலும் பகலிலும் உழல்கின்றார். வாழும் அவர்கட்கு இளைப்பாறவே வழியில்லை. அப்படியே இல்லற சக்கரத்தில அகப்பட்டவர்க்கு, இன்பத்திற்கு இடம் எப்போதும் இல்லை.

சுகா! அறிவறறவர்க்கு இல்லறமே ஆலயம் என்ற உன் கணிதம், தப்புக் கணக்கு. கனிவு தரும் இல்லற அனுபவத்தைக் காண வேண்டும். அதன் பின்னும், இல்லறத்தில் இருந்தே எப்பற்றும் இல்லாமல் இருப்பவனே முத்தன்.

தண்ணீரில் தோய்ந்துளது தாமரை ஆனால் ஒட்டுபற்று ஒன்றும் இல்லை. அருமையான குளத்தில் தாமரை யிருப்பதே அழகு. கோமளமான தாமரை கொடியறுந்து போனால், தாயான நீரே அதை அழுக வைதது அழிததுவிடும். காம்பறுநத கமலம் கரைமீது வந்தால், தநதையான சூரியனே அதைத தகிதது விடுவன். இச்செய்தியை மனையறத்தில் எண்ணுவது மரபு. அதிக போகமும் அழிவு; விட்டு விலகுவதும் வேதனை!

புனித நெறியில் பொருள தேடி, அருள நூற்கள் அறிவிததபடி அக்ககம புறததும் ஒழுக்கம் அமைந்து, வீடு தேடி விரைந்து வரும் பிரமசாரி, வானப் பிரஸ்தர், சந்யாசி முதலினோர்க்கு ஊன்று கோலாக நின்று உதவி, அமரர்க்கு அவிசளித்து, பிதுரர்கட்குப் பிரீதி செய்து வாழ்பவரே பேறான முத்தியைப் பெறுவர். சூரிய சநதிரர்கள் ஓய்வுகொளள எண்ணினால், அன்றே உலகம் அழிநது படும். அதுபோல, மிருதுவாக உரைக்கும் தர்ம சாஸ்திரங்களை மீறி, சால்பு அறியா நிலையில் ஒருவன் சந்யாசம் கொண்டால், மேனகையால் கோசிகனும், பரிமள கந்தியால் பராசரும் பட்டபாடு பட நேரும்.

அப்பா! தொல்லைப் பிறவியில் துக்கம் எததுணை? பிறக்கிற போதோ பெரிய வேதனை. இடையிருந்த நாள எல்லாம துனபத துடிப்பு. நரை திரை மூப்பில் நாலாயிரம் இடர். மரணம் வரும் எனும் மாபெரும் துயரம். வருமே மறு பிறவி என்னும் மன

---

அந்தண்மை யாளர் அறவோர் எனவுரைத்த
செந்தண்மை ஓர்ந்தேன் செயல்படுத்திக் காவாயோ.

வருத்தம். மல மூத்திரம் மலிந்த கருவில், வந்த பின் நேரும் வாட்டம், சொல்ல வேண்டுவதே யில்லை. பொருள் இருந்தாலும் தொல்லை; இல்லையெனில் சொல்லொணுத சங்கடம. வயிறு வாடா மல் வாழ, பகல் முயல்வில் படுதுன்பம் பரிதாபம்தான். எவ்வளவு சங்கடமானது இல்லறம்!

காட்டில் இருந்து காய்கனி யுண்டு, தனித்து இருந்தால தடு மாற்றம் இல்லை,

சுகா! நீயா இப்படிப் பேசுகிருய்? அநுபவம் வேறு. இந்த வாய் வாதம் கலியினது வழக்கம். இந்தத் துவாபர யுகத்திலிருந்தே உன் மூலம், பேசும் வாதம் பிறந்ததை அறிகிறேன். இனி வம்ச விருத் திக்கே வழியில்லையோ? என்னவோ என்று, வருந்திக் கண்ணீர் வியாசர் வடித்தார்.

அடடே! என்ன அப்பா இது? அரிய பிரம சூத்திரத்தை நீரா அருளினீர்? மறைகளை நீரா வரையறுத்தீர்? புராண இதிகாசங் களை நீரா புகன்றீர்?

மாயையில் அடங்காத மக்களே இல்லையா? நீர் யார்? நான் யார்? தந்தை மைந்தன் எனல், வீணன மயக்க விளைவு. இன்று உமது மகன் எனில், முன் பிறவியில் நான் யார் மகன்?

அடக்கி மாயையை ஆளும தேவியை, இனிச் சரணடைகிறேன். அரிய அத்தேவி, அடியேற்கு வாழும் வழியை அறிவிப்பாளாக!

குழந்தாய்! உயர்ந்த பரிபாக உத்தமன் நீ. உரிய சந்யாசத்தில் ஊக்கம் உடையவன். காணப்படும் உலகமெல்லாம் யானே! என்னைவிட அநாதியானது இல்லை என்கிருள், எவர்க்கும் அருள பாலிக்கும் எம்பெருமாட்டி.

சங்கு சக்கரம் ஏந்தினள். கதையும் கமண்டலமும் தாங்கினள். நிர்க்குணையான தேவி, சகுண சொருபமும் சார்பவள். மாயை யன்று, அந்த மாபெரும் சாந்த சக்தி. மறவாது அத்தேவி சொரு பத்தை மனததில் நினை!

**ஓம் ஹ்ரீம் ஸ்ரீம் க்லீம் ஐம் மனசா 'தேவ்யை ஸ்வாஹா**

எனும் பன்னிரண்டு எழுத்தாலான மனுவை உரு ஏற்று! ஸ்ரீபார்வதி தேவி பாகவதத்தைப் பாராயணம் செய்! மாயையில் மயங்கி மடங்காதபடி, அருளார்ந்த அம்பிகை, வாழும் வழியை நமக்கு வகுப்பள் என்று உள்முகம் ஆயினர் வியாசர்.

---

புன்மை யுலகநெறி போகாத வண்ணம்மெய்
நன்மை வழிசார நம்பா அருளுதியோ.

அன்றுமுதல் சுகர் ஏகாந்தர் ஆயினர். உணவைக் குறைத்தார். தந்தை உபதேசித்த உயர்ந்த மனுவை, ஓயாது உருவேற்றல் ஆயினர், பாகவதத்தைப் பாராயணம் செய்தார். எம்பெருமாட்டியை, இப்படியே எண்ணியிருந்தார். உருண்டு ஒரு ஆண்டு ஓடியது.

ஒருநாள் வியாசர் சுகரை அணுகினர். சுகா! செயற்கரிய செயலை இதுவரை செய்தாய்! தக்க அனுபவிகளை இனி நீ தரிசிக்க வேண்டும்! மிதிலைக்குச் செல்! பக்தர் ஜனகரைப் பார்! அவர், வெறி கொண்ட புலச் சேட்டைகளை வென்றவர். விதகர் எவரும் அவரை விதேகர் என்பர். பிரம ஞானத்தில் தெளிந்தவர். ராஜரிஷி அவரிடம் சாதனை அனுபவங்களை அறிந்துகொள்!

அப்பா! அரசைப் பரிபாலிக்கும் அவர் வாழ்வு, ஆரவாரம் ஆனது. அவரை விதேகர் என்பது, மலடி வயிற்று மகன் என்பது போல்வது. ஒரு மன்னற்குப் பேத அபேதம் தோன்றுதேல், அநீதியிது; நீதியிது என்று அறிய முடியுமா? என் மனநிலைக்கும் தங்கள் கருத்திற்குந்தான் எவ்வளவு மாறுதல்? இருக்கட்டும். தங்கள் ஆணைப்படிப் போய்ப் பார்த்துத் திரும்புகிறேன் என்ற சுகர், வலம் வந்து தந்தையை வணங்கினர்.

வீரன் விட்ட பாணம் போல் விரைந்தார். இடைவழியில், கனிவான நிழல்தரும் பல தவ வனங்களைக் கண்டார். தவசிகளைத் தரிசித்தார். அருமையான வளமுடைய மிதிலாபுரியை அடைந்தார்.

பட்டணத்தைச் சுற்றிப் பார்த்தார். அங்கொரு காவலன் இவர் வருகையை அறிந்தான். ஊருக்குப் புதியவர் என்று உணர்ந்தான். எதிர்வந்து மறித்தான்.

நீர் யார்? எந்த ஊர்?

பதில் இல்லை. வாளா மௌனமாக இருந்தார் சுகர்.

ஐயமுற்றான் சேவகன். அவர் வலக்கையைப் பற்றினான், பர பர என்று இழுத்துச் சென்றான். ஊருக்குப் புறத்தில் தள்ளினான்.

சுகர் சிரித்தார். அங்கேயே அசைவற்று இருந்தார்.

ஓய்! நீ என்ன ஊமையா? ஒரு காரியமும் இல்லாமல், புதிய எவனும் ஒரு ஊருள் புகமாட்டான். அரசர் உத்தரவின்றி, எவரும் இவ்வூருள் நுழைவது ஆகாது.

உம் பெயர்? குலம்? சொந்தப்பதி? வந்த காரியம் யாது? உரைத்தால் யோசித்து ஊருள் விடுகிறேன்.

---

நெல்லுக் கிறைத்தநீர் போலுன்அருள் ; என்போல்
புல்லுக்கும் ஆகிப் பொலிவித்தல் காண்பேனே.

சேவகா! ஆசை அற்றவர்க்குச் சுகம் தானாகவே அமையும். எனக்கோ எப்பற்றும் இல்லை. அரசரைப் பார்க்க எந்தை அனுப்பினர். அரசரோ ஊருள் அயலவர் நுழைவது ஆகாது என்று ஆணையிட்டிருக்கிறார். நன்று யிருக்கிறது நாடகம்!

ஸ்வாமி! தங்களை இப்போதுதான் அறிந்தேன். அவசரப் பட்டேன், மன்னிக்கவும்.

அப்பா! குடிகள், ராகி, விராகி என இருதிறப்படுவர்.

அறிந்தவர், அறியாதவர், அறிந்தும் அறியாதவர் எனும் மூத் திறத்தவரும் விராகி எனப் பெறுவர்.

மூர்க்கரும் சதுரருமே ராகி எனப் பெறுவர். இந்த இரு திறத்துக் குடிகளின் மன்னர்தானே இந்நாட்டுக் காவலர்?

அச்சம் சேவகனுக்கு அதிகரித்தது. அவர்க்கு என்ன பதில் சொல்வது என்று தெரியவில்லை. ஸ்வாமி! இனி தாங்கள் இஷ்டப் பட்டால், ஊர்க்குள் செல்லுங்கள் என்று சொல்லி ஒதுங்கினன்.

புனித மிதிலையுள் சுகா புகுந்தார். ஊருள் ஒரே அலோல கல்லோலம். வியாபார கோஷம் ஒருபுறம். இராகத்வேஷ கோப காம க்ரோதங்களின் ஓயாத மோதலால், விளையும் உளைவு கள ஒரு புறம். சாஸ்திர வாத சதுரங்கம் ஒருபுறம். செல்லும் இடந்தோறும், அவைகளை அறிந்த சுகர் மனம் அதிர்ந்தது. அம்பா அம்பிகே! உன் ஆட்சியில் இப்படிச் சீரழிகிறதே உலகம்! என்று கலகல கண்ணீர் சிந்தினர். வானளாவி நிழல் தருகிறது ஒருமரம். அதன அடியில் அமர்ந்தா உவந்து தேவி மந்திரத்தை உருவேற்றினர். தேவி திருவடிகளை நெடுநேரம் தியானித்தார்.

அவரை, வழியே சென்ற அமைச்சா அறிந்தா. பணியாட்கள மூலம் சுகரைப் பல்லக்கில் ஏற்றினர். குளிர்ந்த அரண்மனைப் பூஞ் சோலையிற் கொண்டு போனர். அங்கு ஒரு ஆஸ்ரமம் அமையச் செய்தார். அதனில் அவரை விட்டார். அங்கிருந்து அகன்றார்.

அரண்மனைப் பாங்கியர் பலர் அங்கு வந்தனர். அவர்கள ஒவ்வொருவரும், சுகர்க்குச் சிறந்த பணியைச் செய்தனா. காய் கனிகளைக் கொணர்ந்து எதிரில வைத்தனர்.

மான்விழி மங்கையர் சிலர், மயிலென அசைந்து ஆடினர். குயில் போன்ற குரலால், சில தையலர் மோகன கீதம் பாடினா. மென்தளிர்க் கரங்களால அவாக்கு மாலை சூட்டி வணங்கினர். புனித சந்தனத்தைச் சிலர் பூசினா. பன்னீர் தெளித்தனா சில பாவையர்.

---

வெறிகொண்டு செல்லும் வீண்மனத்தை ஞான
நெறிகொண்டு செல்ல நிமல அருளாயோ.

எதிர் பாராத இவைகளால், சுகர் மனம் திடுக்கிட்டது. என்ன இது? என்று இரைந்தார்.

மிதிலை நகர் விருந்தினர் தாங்கள். வந்தவரை இப்படி உபசரிப்பது, எங்கள் வழக்கம் என்றனர் அந்த வனிதையர். திருப்பணி வேட்கையால், மங்கையர் ஒவ்வொருவரும், முந்தி வந்து இப்படி அவரை முற்றுகை யிட்டனர். மாதர்கள் செய்த அன்பின் பணியை, சுகரால மறுக்க முடியவில்லை.

வரவர, எதிர்மறை மனதில் எழுந்தது. உடலில் சூடு ஏறியது. உள்ளம் நெகிழ்ந்து கொடுத்தது. பாவையரை, எழுந்து பற்றலாமா என்று உணர்வு பதைத்தது.

'ஹஹ்ஹாஹா! ஹஹ்ஹாஹா! நகை ஒலி எழுப்பினர் நங்கையர்.

திடுக்கிட்டது மனம். ஆ! என்ன மோசம்! உயர்ந்த என் அறிவு எப்படி உருக்குலைந்தது? என்று, எண்ணி மனம் கன்னினர். எச்சரிக்கை ஆயினர்.

சந்தயா கால வந்தனை. முதல் ஜாமத்தில் தேவி திருவடித் தியானம். பிறகு இருஜாமம்வரை இன்பத துயில் நிலை, நான்காம் ஜாமதகில் தியான யோகம். இரவெல்லாம் இநத நிலை. பிறகு காலைக்கடன். நீராடல். அதன்பின் எவருடனும் உரையாடார்; எதையும் காணார்; எதையும எண்ணார்; ஏகமுகமாகி, எம்பெருமாட்டி மனுவை உருவேற்றி யிருந்தார்.

எதிரில இருநத மஙகையரை மதித்திலா. இந் நிலையிலேயே இருந்தார்.

ஒருநாள் ஜனகரே வந்தார். அரசர்க்கு உரிய கோலத்தில் அன்றி, எளிய தோற்றததில் வந்த அவரை ஏறிட்டு நோக்கினர் சுகர். பொன்னும் மின்னி, ஜனகர் திருமேனி பொலிவு பெற்றிருந்தது. கண்கள், அருட் பிரகாசம் இப்படித்தான் இருக்கும் என்பதற்குச் சான்றாக இருந்தன.

கண்டார சுகர். எழுந்தார். வந்தவரை உபசரிதது வரவேற்றார்.

சுகா! ஏதேனும் செய்தி இருக்கிறதா?

மன்னா! இல்லறமே நல்லறம் என்கிறார் எந்தை. மணம் வேண்டாமென்று மறுததேன் அது பந்தம் அல்ல என்கிறார். விதேக ஜனகரைப் பார்; அரச பரிபாலனம் செய்கிறார், எனினும் வாழ்க்கை கடலுள் வழுக்குவார அல்லர்; அவரைப் பார்த்தபின் மணம் செய்துகொள என்கிறார்.

நான் முக்தி விருப்பினன். தகவுடைய அதைத் தருவது தவமா? வேள்வியா? வேத அத்யயனமா?

---

போனபோக் கில்மனத்தைப் போகவிடா தேஉன்றன்
ஞானத் திருவடியில் நண்ணவுறப் பண்ணுயோ.

சுகா! பேறுனது பிரமசர்யம். அதையடுத்து இல்லறமே நல்லறம். அதில்தான் களைகளான காமாதிகளைக் களைந்து எறிய முடியும்

மனைவியைப் பிறகு மகனிடம் ஒப்படைத்து, வானப் பிரஸ்தம் கொளவது நல்ல வழி. இறுதியதே சந்யாசம். அங்ஙனம் இன்றி எடுத்ததும் சந்யாசமேல், மனநிலையில் பல மாறுதல் ஏற்படும்.

எறும்பின் முயற்சிபோல், ஆஸ்ரம தர்மங்களில் படிப்படியாக இப்படித்தான் வளர வேண்டும்.

நாற்பத்தெட்டு சம்ஸ்காரங்களைக் குதூகலமாக வேதம் குறிப்பிடுகின்றது. இவைகளுள் நாற்பது இல்லறததானுக்கும், எட்டு துறவிகட்குமாம். ஆஸ்ரமங்களில் முதன்மை பெற, இப்படி முன் னேறுவதுதான் முறை.

நான் அரசன். எனக்குச் சுக துக்க பேதம் தோன்றுவது இல்லை. முதன்மைத் தர்மங்களில் முன்னேறினேன். முத்தன் ஆயினேன்.

கர்மததைச் செய்! வித்தகப் பயனை விரும்பாதே! இதுவே ஜீவன் முக்தி நிலை.

வெய்யிலின் கடுமை இலதேல், நிழலின் அருமையை நினைக்க வழியில்லை. அவித்தையின் துன்பமின்றி, வித்தையின் இன்பம் எப்படி விளங்கும்? பொறிகளும், புலன்களும், குணங்களும் அதன் அதன் இடத்தில் இருக்க, அவைகளில் ஒட்டுபற்று ஆனமாவிற்கு ஒன்றும் இல்லை. யோசிததுப் பார்!

ஜனகரே! மாயையின் வயத்தில் மயங்கி இல்லறமே இன்பம என்று இருப்பவர்க்கு, ஆசை இல்லை என்பது அறிவுக்குப் பொருந்துமா? விசாரணை யிருக்கலாம்; அதனால அவன் விவேகி ஆகலாம்; ஜீவன் முக்தன் ஆக முடியுமா? அறியாமையை நூற்கள் அகற்றுமா? விளக்கு என்ற பெயரளவில் தீராத இருள தீருமா?

அரசே! உமக்கு அரசைக் காக்கும் ஆசை உண்டு; பழுத்த துறவிகளிடமும் பறறு உண்டு. நீர் எப்படி விதேகர் ஆவீர்?

சுகா! உனது பிதா எனது குரு. அததகைய தந்தையைப் பிரிந்து தவஞ் செய்ய எண்ணினை. வனவாச வாழ்க்கையில், வன விலங்குகளின் உறவு வலிந்து வரும். அந்தப் பந்தம் வேண்டா எனில், இந்த சம்பந்தத்திற்கு என் செய்வை?

எனவே, எவர் தொடர்பும் இல்லாமல் இருக்க முடியாது. உணவின் பொருட்டு, கவலை அங்கும் உனக்கு உண்டாகும். அதற் காகக் காய் கனி பறிப்பீர்; அது சிந்தனையின் தூண்டுதல் அல்லவா.

---

குரங்குமனம் வந்தென்னைக் கொண்டோடிப் போகாமல்
வரங்கொடுத்தே ஏற்றென்னை வாழ்வித்தல்செய்வாயோ

மான் தோலும் யோக தண்டமும் தேவை. உனக்கு அவைகளால் கவலை; எம்போன்றார்க்கும் கவலையிருக்கிறது. எனவே இருவர்க்கும் கவலை பொது.

சுகமாய் உறங்குகிறோம். புசிக்கிறோம். என்ன இருந்தாலும் பந்தன் என்ற புந்தி யில்லை. அதனால், எப்போது சுகமாகவே இருக்கிறோம். இதுவே எம செய்தி.

உடம்பு நான் அல்ல என்பதே முக்கியம் இந்த அபிமானம் இல்லையேல் எந்த பந்தமும் இல்லை. அகங்காரம் இங்கில்லையில் அழியும். துன்பம் ஒன்றும் தோன்றாது.

உடன்பாடும் எதிர்மறையுமான உலகப் போக்கை உணர, இல்லற நல்லறம் பெரிதும் வேண்டும். இச்சைக்கு உரிய பொருள்கள் எதிரில் இருக்க, அவைகளில் ஒட்டாது பற்றாது இருக்கும் மாபெரும் சாதனையே மனையறம்.

தக்கவர்க்குத் தானம் தா! இங்கில்லையில் எனது என்கிற மமகாரத்திற்கு இடம் இல்லை. இந்த இரண்டிலும் பயின்று தெளியாதார், மண் பெண் பொன் கண்டபோது மயங்க நேரும்.

ஜனகர் பொன்னுரைகள், சுகர் இதயத்தில் பதிந்தன. அவரை வணங்கினார். பிரியா விடை பெற்றார். அங்கிருந்து புறப்பட்டார். வந்து வியாசரை வணங்கினார்.

சம்சாரம் பந்தம் அன்று; மனமே பந்தமே பந்தம் என்று தெளிந்தார்.

தந்தை திருவுள்ளப்படி, பிதுர் தேவதைகளின் மகளான பீவரி என்பாளை மணந்தார். நல்லற இல்லறம் நடத்தினார். கிருஷ்ணன், கௌரப்ரமன், பூரிதன், தேவஸ்ருதன் எனும் பிள்ளைகள் நால்வரைப் பெற்றார். பெரும் கீர்த்தி என்ற பெண் ஒன்றும் பிறந்தது.

மகளை, காலத்தில் அணு எனும் மகானுக்கு அளித்தார். ஆண் மக்கள் நால்வருக்கும் மணமுடித்து வைத்தார். இடையிருந்த காலமெல்லாம், தேவியைத் தியானித்து இருந்தார்.

ஒருநாள் திருக்கயிலாயம் சென்றார். தியான நிஷ்டராயினார். எண்வகைச் சித்திகளையும் எய்தினார்.

அம்மலையி லிருந்து, உதய பரிதிபோல் விண்ணில் எழுந்தார். எழுந்த வேகத்தால், அசையாக் கயிலையும் சிறிது அசைந்தது. மஹாதேவி!! என்று, வீரிட்ட அன்புக்குரல் ஒன்று அந்தரத்தில் எழுந்தது

ஆம். அவ்வளவுதான். அவருடைய காயம், அன்று அணு அணுவாய் ஆகாயத்தில் கலந்தது.

---

எண்ணம் இனிதாகி இன்ப நலம் எந்நாளும்
நண்ணத்தா, மேலோர் நல்லத்தா! நாயேற்கே.

விவரம் உணர்ந்தார் வியாசர், விரைந்து வந்தார், புத்திரா! புத்திரா!! என்று கயிலை அடிவாரத்தில் சுற்றி சுற்றிக் கதறினர். அவர் நிலை கண்ட தேவி, மகாதேவர்க்கு அறிவித்தாள். சுகனே! சுகா! என்றார்க்கு, இறைவர் அருளால், ஏன்? ஏன்? என்று எதிரொலி எழுந்தது.

அதைக் கேட்டும் ஆறுதல் அடையாத வியாசர் முன், அம்பிகை தரிசனம் ஆயினள்.

வியாசா! நின் மகனயிருந்த சுகன், இன்று நம் அருள் நிழலி லிருக்கிறன்; முதன்மை அப்பேறு பெற நீயும் முயற்சி செய்! என்றருளி, திருவுருக் கரந்தாள் தேவ தேவி.

அதன் பின் வியாசர், பகவதி பிரதாபம் பாடலாயினர். அதற்கான பேறும் பெற்றார். அவர் போலும், ஆநந்தரான சுகர் போலும், தேவியருட்கு உரியவர்கள் இன்றும் எண்ணிறந்தோர் இருக்கின்றனர்!

வாழ்க தேவி தாஸர்கள்!

---

# முனிவர் காட்டிய முதல்வன்

(சி. குமாரஸ்வாமி)

(பக்கம் 500 தொடர்ச்சி)

இப்போது நாம் எங்கே இருக்கிறோம் என்று தெரியுமா? நம் முதல்வன் விரும்பித் தங்கும் மூன்றாவது ஊரில் இருக்கிறோம் சுவாமி. முதல்வனைப் பார்க்க வேண்டும் என்ற அவாவினல் வெகு சீக்கிரம் வந்துவிட்டோம் நாம்.

அங்கென்ன ஒரே கூட்டமாக உள்ளது. அவர்கள் யார்? அவர்களும் நம்மைப்போல் நம் தலைவனைப் பார்க்க வந்தவர்கள் தானே சுவாமி?

ஆம். அவர்களும் நம் தலைவனைப் பார்க்க வந்தவர்கள் தாம். ஆனல் அவர்கள் ஒரு காரியமாக வந்துள்ளனர்;

---

ஊரெல்லாம் போற்றுகின்ற வாழ்வெய்தி ஞருன்றன்
சீரெல்லாம் ஏத்திவந்த செல்வர்களென் ஞேர்ந்தேனே.

அவர்கள் தேவர்கள். அவர்களோடு முனிவர்களும், கந்தருவரும், கந்தர்வ மகளிரும் வந்துள்ளனர்.

இந்தப் பட்டினிப் பட்டாளங்கள் கூட ஏன் வந்தன இங்கு? உடம்பிலுள்ள எலும்பெல்லாம் தெரிகிறதே! ஐயோ பாவம்! சாப்பிட்டுப் பலநாளாகிவிட்டது போலும்! அவர்களுக்கு வயதும் ஆகிவிட்டது என்பதை அவர்களது நரைத்த (வெண்மையான) முடி வெளிப்படுத்துகிறது. அவர்கள் ஊரில் துணிப்பஞ்சம்கூட உண்டு என நினைக்கிறேன். அதனால்தான் மரவுரியை உடுத்திருக்கிறார்கள்.

"அவர்களை அப்படியெல்லாம் கேலி செய்யக்கூடாது. அபசாரம்." "அவர்கள் திருமேனி மாசு இல்லாதது. தவத்தின் காரணமாக பல நாட்கள் சேர்ந்தாற்போல் உணவை உண்ணாது விட்டவர். பகையும், ஹிம்சையும் நீக்கிய மனத்தினர். கற்றவர்களும் அறியாத சிறந்த அறிவாளிகள். கற்றவர்கட்கெல்லாம் தலைமையானவர்கள். காமமும், சினமும் நீத்த சிறப்பாளர்கள். சிறிதளவும் துன்பம் என்பதை அறியாத தன்மையர். நல்ல ஞானிகள். முனிவர்கள். நமது தலைவனுக்கு மிகவும் விருப்பமானவர்கள்.

"ஆ! அப்படியா சுவாமி. தெரியாமல் அதிகப் பிரசங்கம் செய்துவிட்டேன் மன்னிக்கவும்"

அதோ பார். இன்னிசை முழக்குகின்றனர். அவர்கள் கந்தருவர். மெல்லிய, அழுக்கில்லாத தூய உடையை உடுத்து, மொட்டவிழ்ந்த மாலையைத் தங்கள் மார்பிலே அணிந்துள்ளனர். சுருதிகூட்டிய நரம்புக் கட்டையுடைய நல்ல யாழிலே பயிற்சி யுடையவர்கள். அன்புடைய நெஞ்சையும், மெல்லிய மொழிகளையும் உடையவர்கள். இவர்கள் இனிய நரம்பை மீட்டி இசை பாடுகிறார்கள்.

---

**உண்ண உணவிலராய் ஓராடை தாமிலராய்**
**நண்ணரினோர், உன்னவரை நையச்செய் தாரேயோ.**

"அவர்களோடு நிற்கிறார்களே அந்தப் பெண்கள் யார் சுவாமி?"

அவர்கள் குற்றமற்ற கந்தருவப் பெண்கள். அவர்கள் உடம்பு நோய் என்பதே அண்டாதது. மேனிநிறம் மாந தளிரைப் போலப் பிரகாசிக்கிறது. பொன்னை உரைத்தாற் போலத் தேமலை உடையவர்கள். அவர்கள் அணிந்துள்ள மேகலையானது, உரிய இலக்கணப்படி தாழ்ந்தும் உயர்ந்தும் உள்ள அல்குலை மறைத்தாக கொண்டு பிரகாசிக்கிறது. கந்தருவரும் கந்தருவ மகளிரும் இணைந்து பாடுகின்றனா. ஆகவே, அப்பாட்டு குற்றமில்லாமல் சிறந்து விளங்குகிறது.

"இன்னும் யார் யாரோ வந்துகொண்டிருக்கிறார்களே? அவர்களைத் தங்களுக்குத் தெரியுமா சுவாமி?

"எனக்குத் தெரியாதவர்களே கிடையாது. எல்லோரும் தெரிந்தவர்களே"

கருடன் எப்பேர்ப்பட்டது தெரியுமா? விஷத்தையுடையதும், நெருப்பைப் போல் மூச்சு விடுவதுமான கொடிய பாம்பைத் தனது பல கோடுகளையுடைய வளைந்த சிறகால் அடித்துக் கொல்லக் கூடியது. அத்தகைய கருடனையே தன் கொடியில் வைத்துள்ளவரான திருமால் அதோ முன்னே நிற்கிறான்.

எல்லோராலும் புகழப் படுபவனும், வீரம் மிகுந்த தோள்களை யுடையவனும், உமாதேவியார் ஒரு பக்கத்தில் தங்கி விளங்குபவனும, முக்கண்ணனுமாகிய சிவ பெருமான் வெள்ளை நிறமுடைய ரிஷபக் கொடியோடு இரண்டாவதாக நிற்கிறான்.

"இதென்ன சுவாமி, இவருக்கு உடம்பெல்லாம் கண்கள் மயமாக உள்ளது?"

இவன்தான் ஆயிரம் விழிகளையுடைய இந்திரன். நூறு வேள்விகளைச் செய்து சதமகன் என்ற பெயர் பெற்

---

புண்ணியராய் நின்னைப் புகழ்ந்தேத்திப் போற்றியவர்
விண்ணினராய் இன்ப விளைவினர்கள் ஆவாரே.

றவன். இவன் வாகனத்தைப் பார்த்தாயா? நான்கு கொம்பு களோடு நீண்ட பெரிய வளைந்த துதிக்கையை யுடையது மான ஐராவதம் என்னும் யானை வெள்ளை நிறமுடையது.

"ஆம சுவாமி. இவர்களுக்கெல்லாம் ஒரு காரியமாகத் தான் வந்துளளனர் என்றீர்களே, அக்காரியம் யாது?"

அதுவா. இந்த மூன்று பேருக்கும் இப்போது வேலை யில்லை. வேலைக்கார வேலவனைத் தேடி வந்துள்ளனர். நமது தலைவன், சிருஷ்டிகர்த்தாவை (பிரமனை) நோக்கி பிரணவப் பொருள் உரைக்குமாறு வினவினன். பிரமன் விழித்தான். ஆகவே அவனைக் குட்டிச் சிறையிட்டான். படைப்புத் தொழில் நின்றது. அதனால் மற்ற மூவர் வேலையும் போயிற்று.

பறிபோன பதவியை மீண்டும் அடையவும், உலகத் தைப் பாதுகாக்கவும், அயனுக்கு விடுதலை யளிக்குமாறு நமது தலைவனிடம் முறையிட வந்துள்ளனர்.

"சிருஷ்டிகர்த்தாவுக்கு ஏன் அவ்வளவு சிறப்பு. அவனில்லாமல் மற்ற மூவரும் ஏன் அத்தொழிலை நடத்தக் கூடாது?"

அவன் இன்பம் மிகுந்த பூவுலகத்தில் தோன்றியவன். தாமரையால் பெறப்பட்டவன். பல ஊழிக்காலத்தை ஆயுளாக உடையவன். படைப்புத் தொழிலும் அவனால் தான் நடகக வேண்டும். அதனால்தான் அவனுக்குச் சிறப்பு. அவனை விடுதலை செய்யவே மற்ற மூவரும் வந்துள்ளனர்.

"சுவாமி, இதென்ன பெரிய கூட்டம் ஒன்று வரு கிறது. இவர்களுக்கு பேட்டியளிக்கவே சரியாக இருக் கும் போலுள்ளதே. நம் தலைவனுக்கு. நாம் எப்போது அவனைப் பார்ப்பது?"

கவலைப்படாதே. நிச்சயம் நாமும் அவனைப் பார்க்க லாம். அந்தக் கூட்டத்தில் உள்ள ஒவ்வொருவரும் குட்

---

கெட்டஎண் ணங்கள் தாம் கேடுதரும்; நெஞ்சில்
ஒட்டியதேல் வாழ்வு ஒழியுமெனல் ஓர்ந்தேனே.

டித் தேவர்கள், சுடர்வீசும் மேனி படைத்தவர்கள். நான்காக வேறுபட்ட இயல்பினையுடைய முப்பத்துமூவரும் பதினெண் கணத்தினரும் வருகின்றனர். விண்மீன்கள் போல் அவர்கள் மின்னுகிறார்கள். காற்றைப்போல மிக வேகமாக வருகிறார்கள். காற்றிடைத் தீத்தோன்றினாற் போன்ற வலிமையுடையவர்கள். இவர்களும் தங்கள் குறைகளை விண்ணப்பித்துக் கொண்டு, அதனால் கிடைக்கும் பாக்கியங்களுள் தாங்கள் பெறுவதற்குரிய பங்கைக் கொள்ளும் பொருட்டு வானத்திலே சுழன்று வந்து ஒருங்கே நிற்கின்றனர். இவ்வளவு பேரும் தரிசிக்க, நமது தலைவன் குற்றமற்ற கற்பையுடைய தெய்வயானை யம்மையுடன் இங்கே (ஆவினன்குடி - பழநி) தங்கிக் காட்சி தருகிறான்.

"அதோ பாருங்கள் சுவாமி, ஆஹா! கோடி சூரியர்கள் பிரகாசிப்பதுபோல் மிக ஜோதியாகக் காட்சி தருகிறான். அந்த அம்மையாரும் அருகே அமர்ந்துள்ளார்கள்."

(தொடரும்)

# அவருக்கென்ன குறைச்சல்

(திருப்புகழ் அரசு வெங்கட்ராவ்)

"எந்தக் காலத்திலும் ஏற்பது உயர்வாகக் கருதப்பட்டதில்லை. ஏற்பது தனம் இல்லாமையை மட்டுமா குறிக்கும்? சக்தியின்மை, உதவி செய்யக்கூடிய நட்பின்மை, உறவினரின்மை என்றவாறு, பல்வேறு குறைகளையும ஏற்றல் வெளிப்படுத்தும். செல்வம் முதலிய வசதிகள் கொஞ்சமிருப்பினும் யாரும் யாசிக்க மாட்டார்கள். எப்படி யாவது தம்முடைய தேவைகளைச் சமாளித்துக் கொள்ள முயல்வார்கள். இதுவே இயல்பு. ஒருரிவடம் பல அதிசய சக்திகள் இருக்கின்றன. மிகுந்த தனவந்தரின் நட்பு

---

தீய நினைவுகளால் பாவம் திறுதிறுக்கும்
தூய்மையளித்தென் முன்னீ தோன்றுவதுமெந்நாளோ.

இருக்கிறது. அவருக்கே குறையாத செல்வமும் இருக்கின்றது. இவையன்றி, ஒரு பெரிய ராஜகுமாரி தானே அவரை விரும்பி மணந்துகொண்டு இணைபிரியாது அவருடன் வாழ்கிறாள். அத்தகைய மேன்மை யெல்லாம் கூடிய நல்வாழ்வு கொண்டுள்ள அவருக்கென்ன குறைச்சலிருக்க முடியும்? அப்படிப்பட்ட பெரியவர் ஏற்கத் தொடங்கினார் என்றால ஆச்சரியமான விஷயமல்லவா! அதுவும் ரகசியமாகவா யாசித்தார்! இல்லை. பகிரங்கமாகப் பல இடங்களில் ஏற்றுத் திரிந்தார். அதைப் பார்த்து இதென்ன கூத்து, இவருக்குப் பித்துத்தான் பிடித்திருக்கிறதென்று உலகத்தோர் நையாண்டி செய்திருப்பார்களென்று சொல்வீர்கள். அதுதான் இல்லை. மிகப்பெரியவர்களும் அவரையும் அவர் செயலையும் புகழ்ந்து போற்றியிருக்கிறார்கள்; இது விந்தையினும் விந்தையாக வல்லவா இருக்கிறது. ''யார் அவர்? ஏன் அவர் அப்படிச் செய்தார்? எதை யாசித்தார் என்று கேட்கிறீர்கள்?'' என்று சொல்லிச் சற்று நிறுத்தினார் பாகவதர்.

வழக்கமாகச் செய்துவரும் சோமவார பஜனைகளின் மத்தியில், சீதாராம பாகவதர் சற்றுநேரம் ஏதாவது விஷயத்தைப் பற்றிப் பேசுவார். அன்று பிரதோஷமும் சேர்ந்திருந்ததால் கோவிலில் கூட்டம் அதிகம். அங்கு வந்திருந்தவர்களிடையே பேச்சும் அதிகரிக்கலாயிற்று. ''நம: பார்வதீ பதயே'' என்று கணீரென்று பாகவதரின் குரல் தம்பூரா சுருதியுடன் சேர்ந்தெழுந்தது. ''ஹரஹர மகாதேவ'' என்று எல்லோரும் பின்பற்றினர். நிச்சப்தம் நிலவிற்று. ''அப்படிச் செய்தவர் வேறு யாருமில்லை. சாக்ஷாத பரமேஸ்வரனேதான். மானைக் கரத்தில் வைத்திருக்கிறார். (அத்துடன் வந்தெழுந்த அக்னி, கபாலம், தமருகம், மழு எல்லாம் அவர் தரித்திருக்கிறார். தாருக வனத்தில் முனிவர் செய்த கொடிய வேள்வி அவரையொன்றும் செய்ய முடியவில்லை. அவருக்கு அவ்வளவு

---

அகத்தே அமைதியுளார் அன்புவாழ் வெய்திமதி
இகத்தே மகிழ்சூழல் எய்துவரென் றோர்ந்தேனே.

சக்தி.) குபேரனே அவருக்குத் தோழன். இனம் இனத் தோடேதான் சேரும். குபேரன் நண்பனாயிருக்க வேண்டு மல்லவா. ஆம். அவர் குறையாத் திருவுடையவர். செல்வ மட்டுமா! பிழை செய்து, கலையழந்த சந்திரனையும் தன் தலைமேலேயே வைத்துக் கொண்ட அருட் செல்வர் அவர். அந்த அருள் நிழலில் பனிமதியுடன் பாம்பு மல்லவா நட் பாயிருக்கிறது! அதுவன்றிப் பூலோக கைலாயமாகிய மதுராபுரி இறைவி மீனும்பிகை தானகவே அவரை விரும்பி மணந்து கொண்டுள்ளாள். பின்னர் அவருக்கென்ன குறைச்சல்! ஏன் அவர் கையேந்தி ஏற்கத் துணிந்தார்" என்று தொடங்கி,

மானூர் கரத்தன், குபேரனற் றோழன், மதியரவு
தேனூர் இதழி தரித்தோன், குறையாத் திருவுடையான்
மீனூர் விழிச்செல்வி இன்பமணுளன் வியனுலகில்
ஏனே இடுபலிக் கேவநது கையினை ஏந்தினனே

என்று விஸ்தாரமாக சங்கராபரண ராகத்தில் பாடி நிறுத் தித், தம்பூரா மீட்டுக் கொண்டிருந்த சிஷ்யனை நோக்கினர் பாகவதர்.

ஏந்திழை மாதுமை யாள மணவாளன் இருநிலததில்
மாந்தர்கள தம்ஜீவ போதம் தாம்பலி வாங்குவது
தாந்தம தென்ற அழுக்கறத் துல்லிய சற்சிவமார்
சாந்தநல் வாழ்வு தருவதற் கேயிது சத்தியமே.

என்ற பாடலை இனிமையாகப் பைரவி ராகத்தில் சிஷ்யன் பாடினன்.

நம்மிடம் நிரமபியிருககும் நாம, நமது என்று தடிப் பேறிய ஜீவபோதத்தைப் பகவான் பிக்ஷையாக வாங்கிக் கொண்டு, எல்லாம் சிவ சொரூபமாம் சச்சிதானந்த மயம் என்ற சிவபோதத்தை நம்முள் வளரச் செய்கிறர். அப் படிப் பிக்ஷை யெடுததாலும், அவர் வாங்கிக் கொள்வதை விட நமக்கு அவர் திருப்பி யளிப்பது எவ்வளவு பெரியது!

---

கண்ணுக்கு மையாம் கருத்திற் கருளழகாம்
விண்ணுக் கழகாம் விமல!என்முன் வாராயோ.

*தந்ததுன் தன்னைக் கொண்டதென் தன்னைச்*
*சங்கரா ஆர்கொலோ சதுரர்'*

என்றார் மணிவாசகப் பெருந்தகையார். இறைவனுடைய பெருங் கருணைத் தடங்கலுக் கெல்லை தானுண்டோ! அவருக்கென்ன குறைச்சல்? ஒன்றுமில்லை'' என்று பாகவதர் முடித்தபோது, அங்கு வந்திருந்தவர்களின் உள்ளங் குளிர்ந்து இரு கண்களிலும் நீர்மல்கி யிருந்தது.

---

# உபநிஷதங்களின் உள்ளொளி

(விஜயலக்ஷிமி)

(பக்கம் 463 தொடர்ச்சி)

இவ்வுபநிஷதங்களுள் ஒவ்வொன்றும் குறிப்பிட்ட சில கருத்துக்களை வலியுறுத்துகின்றன. சில இடங்களில் அவை மாறுபட்ட கருத்துக்களை கூறுவதாகத் தோன்றிய போதிலும் அவ்வேறுபாட்டை நாம் பெரிதாக எண்ணத் தேவையில்லை. இவ்வேறு பாட்டிற்கு அடிப்படையான ஒரு காரணமும் உள்ளது. உபநிஷதங்கள், அறிவினைக் கொண்டு ஆராய்ச்சி செய்து கட்டிய மாளிகை அல்ல. ஞானிகளான மஹரிஷிகள் தங்களது அநுபவங்களைப் பதித்து வைத்த குறிப்புப் புத்தகங்களேயாகும். மனோ நிலைக்கு ஏற்ப அவரவர்க்கு வேறுபட்ட அநுபவங்கள் ஏற்பட்டிருக்கின்றன என்பதை நாம் உணரவேண்டும். எனவே, அவற்றை மேலளந்தவாரியாகப் படிக்காமல், படிப்பதை சிந்தித்து ஒரு முடிவுக்கு வந்து, அம்முடிந்த கருத்தையே தியானித்து வந்தால், தியான இறுதியில் அவர்கள் கூறியுள்ள அநுபவம் நமக்குக் கிட்டும். முன் காலத்தில் புத்தகங்களும், அவற்றைப் படிக்கும் பழக்கமும் அத்தனை பிரபலமாக இராததால், உத்தமமான ஆசிரியரிடம் தகுதி வாய்ந்த சீடன், பரம்பொருளைப் பற்றிச் சிர

---

ஆடை யணிபுனை ந்தே ஆக்கை மினுக்காமல்
நீடார்வம் கொண்டுன்னை நினைக்க அருளுதியோ.

வணம் செய்து (கேட்டு,) கேட்ட பொருளைச் சிந்தித்து (மனனம் செய்து), சிந்தித்ததை தியானித்து (நிதித்யாஸனம்), முடிவாக பிரம்ம அநுபவநிலையை (பிரம்ம ப்ராப்தி) அடைந்தான். இப்படிஅடைந்தவனது பாசத்தளைகளைத் தும் அகன்றன. (அத்யந்த ஸம்ஸார நிவிர்த்தி) இதுவே உபநிஷதங்களை உண்மையாகக் கற்பவர்களுள் பெறும் பேறுகும்.

உபநிஷதங்களை உத்தமமான குருவிடம் பக்தியுடனும் ஆர்வத்துடனும் சென்று, அன்புடன் பணி செய்து கற்க வேண்டும் என்று வேதங்கள் கூறுகின்றன. "பலருக்கு ஆத்மாவைப் பற்றிக் கேட்கும் பேறு கிட்டுவதில்லை. பலர் கேட்டாலும், சிலரே அதனைப் புரிந்து கொள்ளக்கூடும். உபநிஷதங்களைப் பற்றிக் கூறுபவன் மேன்மை படைத்தவனுகின்றான். அவற்றைக் கற்பவன் சிறந்த அறிவு நிறை மேதையாகிறான். முறையாகக் குருநாதரிடம் இதனைக் கேட்டு அறிந்து, உணருபவன் பாக்கியனுகிறான் என்று உபநிஷதம் கூறுகிறது.

இன்றைய உலகில் பலர் குருஸ்தானம் வகிக்க விரும்பி பெருவாரியான மக்களைக் கூட்டமாகத் திரட்டி, பிரசங்கங்கள் மூலம் பலதரப்பட்ட கருத்துக்களை உபதேசிக்கின்றனர். ஆனல் இத்தகைய உபதேசங்களால் பயனடைபவர்கள் வெகு குறைவே. உண்மையான அதிகாரம் வாய்ந்த சீடனுக்கு, உத்தம குரு, அருகிலிருந்து, தனது வாழ்க்கையின் மூலம் உபதேசிப்பதுதான் நமது ஆத்மீக விழிப்புக்கும் வளர்ச்சிக்கும் ஏதுவா யிருக்கும். ஏனைய அனைத்தும் செவிக்கு உணவேயன்றி ஆத்மப் பசிக்கு உணவாகாது. சத்குரு, கடினமான தத்துவங்களுக்கு வியாக்யானம் செய்து, வேதத் திருமந்திரங்களுக்கு உரை கூறி, கருத்துக்களைத் தெளிவாக்கிய போதிலும், அவரது வாழ்க்கையால் விளக்கும் தத்துவங்களும், அநுபவத்தில் தாமே உணர்ந்து நமக்குக் காட்டும் தத்துவங்களுமே நமக்கு நற்பயனளிக்க வல்லவை. உபநிஷதங்களைக் கற்பது அறிவின் ஆற்றலைப் பெருக்குவதற்கே என்பதை மறத்தல் கூடாது.

---

மனமும் உயிர்க்குணமும் மாஒளியைச் செய்ய
இனமா மனிதநிலை எய்தஅருள் பெய்வாயோ.

நாம் உபநிஷதங்களை நாடிச் செல்லும் காரணம் யாது? உபநிஷதமே இதற்கு மறுமொழியும் பகருகிறது. "அழியாத அமைதி பெற" "ஆத்மாவை அறிந்த அவனே அமைதியை, எண்ணங்கடந்த; சிந்தை மாய்ந்த அமைதியைப் பெற்றவனாகிறான்' தேஷாம் சாந்தி: ஸாஸ்வதி நேதரேஷாம். குழப்பமற்ற, சுக துக்கங்களைக் கடந்த அமைதியும் உள்ளத் துறையும் பேரானந்தமுமே உண்மையான அநுபவமாகும். இவ்வானந்த நிலைபெற நம்மை அழைக்கிறது உபநிஷதம் "எழுமின் விழுமின் கருதிய காரியம் கைகூடும்வரை சாதனம் செய்ம்மின்" என்கிறது. அதே சமயம், இது வெறும் அறிவினால் அடையத் தக்கதல்ல, ஆசாரியாரிடம் அடக்கத்துடன் கேட்டு, தியானித்து, மன ஒருமைப் பாட்டுடன் தவம் புரிந்தாலே கிட்டிடும் என்றும் வெளியிடுகிறது.

உபநிஷதக் கருத்துக்கள் ஸம்ஸாரத் தளையிலிருந்து பூரண விடுதலை கொடுக்கும். நாம் உலகை உதறிவிட்டுச் செல்லலாம் என்று கருதுவோமாயின் அது பெரிய தவறாகும். நமது அறியாமையாலும், பலவீனத்தாலுமே நாம் ஸம்ஸாரத்தைக் கடினமானது, துக்கமானது, இன்பத்தைக் கெடுப்பது, பந்தத்தில் ஆழ்த்துவது என எண்ணுகிறோம். ஆனால் உபநிஷதத்தில், ஸம்ஸாரத்தினிடம் தோல்வியடைந்ததாக ஒப்புக் கொள்ளும் தன்மையோ, கஷ்டத்தை உதறிச் சென்று அதனினின்றும் தப்பித்துக்கொள்ளும் வழியோ, உலகில் நாம் இயற்ற வேண்டிய கடமைகளை உதாசீனம் செய்து ஓடிவிடும் வழியோ, கூறப்படவில்லை. "தொடர்ந்து நீ செய்யவேண்டிய கடமைகளை ஒழுங்காகச் செய்து அதன்மூலம் பூரண ஆயுளான நூறு ஆண்டுகளும் வாழ முயல். மேல்நிலைக்குச் செல்ல இதனைத் தவிர வேறு சிறந்த முறை ஏதுமில்லை. இதுபோன்று எவன் தனது கர்மங்களை புரிகிறானோ அவன் கர்மத்தின் பலாபலனால் பாதிக்கப்படுவதில்லை" என்று ஈஸா வாஸ்ய உபநிஷதம் கூறுகிறது:

"ஞானிகளுள்-உண்மையை உணர்ந்தவர்களுள் - தலை

---

சித்தசுத்தி யில்லாதார் செத்தபிணம் ஒப்பரென
அத்தா அறிந்தேன் அதுவுந்தான் நின்னருளோ.

சிறந்தவர் யார்?" எனும் கேள்விக்கு முண்டகோபநிஷதம் பின் வருமாறு பதிலளிக்கிறது. "எவன் தனது உள்ளுணர்வுடன்-ஆத்மாவுடன்-விளையாடிக் கொண்டிருக்கிறானோ, முழுதும்கர்மத்தில்ஈடுபட்டவனாய்த் தோன்றிய போதிலும், எவன் எப்போதும் ஆத்மா நினைவிலேயே மூழ்கியவனாய் இருக்கிறானோ, அவனே சிறந்த ஞானியாகிறான்"

உலகம் மிகத் தாழ்மையானது என்று ஒதுக்குவதையும், (pessimism) கர்மம்புரியாது இருப்பதையும், உபநிஷதம் எத்தனை கண்டிக்கிறது என்பதற்கு இதுவே நல்ல அத்தாட்சி. கடமைகள் நிறைந்த வாழ்க்கை வாழும் மக்களை, மனம் கலவாத இயந்திரம் போன்ற துறவு (mechanical renunciation) புரியுமாறு அழைக்காது, உலக இன்ப துன்பங்களினால் பாதிக்கப்படாத உண்மையான ஆனந்தம் நிறைந்த வாழ்க்கை வாழ அழைக்கும் ஒரு மெய் வாழ்க்கைத் தத்துவ நூல் உபநிஷதம். உபநிஷதம் நம்மைத் தவம் புரியுமாறு அழைப்பது உண்மைதான். ஆனால் 'தவம்' எனும் சொல் 'சூடாக்குதல்' என்றே பொருள் படுகிறது. நமது எண்ணங்களை ஒருமுகப்படுத்தி மனத்தை ஓடவிடாது, ஒரே இலக்ஷ்யத்தில் ஒன்றிடச் செய்யுமாறு கூறுகிறதே யன்றி, உண்மையான அகத் துறவு இல்லாது, தனித்து வாழ்ந்து, கடுமையான, அர்த்தமற்ற ஆசாரங்களை அநுஷ்டிக்குமாறு கூறவில்லை. அவைகள் துறவை, தியாகத்தை வலியுறுத்துகின்றன, "தியாகேனைகேன' என்று கூறத்தான் செய்கிறது. ஆனால் இத் தியாகம்' 'பற்றற்ற தன்மை' யைத்தான் குறிக்கிறது. 'தியாகத்தில் களிப்படை' என்கிறது ஈஸாவாஸ்ய உபநிஷதம்.

இறப்போ, இருட்டோதோல்வியோ, தப்பி ஓளிவதோ, அறியாமையோ, பலவீனமோ அதுவும் உபநிஷத்தால் ஒப்புக்கொள்ளப் படுவதில்லை. உனது இலக்ஷ்யம் ஒருகாலும் கேவலமான பொருட்களாக இருத்தல் கூடாது; உனது லக்ஷ்யம் அமரத்துவம், ஞானம், அந்தமற்ற முடிவற்ற பரம்பொருளாக (சத்யம், ஞானம், அனந்தம்) இருக்கட்டும்" உனது லக்ஷ்யம் அமைதியான, மங்களமான,

---

அரச பதவியினும் அன்புடைய நன்மனந்தான்
வரிசை பெறுவததில் வாழ்வருள வல்லாயோ.

அழகான பரம்பொருளாய் இருக்கட்டும். (சாந்தம், சிவம், சுந்தரம்) என்னும் வாக்கியங்கள் காலத்தால் மாறாத உபநிஷத மாளிகையின் வாயில் எழுதப்பட்டுள்ளன. உலகில் இருந்து, உலகிலே, உலகத்தோடு வாழ்ந்து பரம்பொருளைக் காணவேண்டும் என்பது உபநிஷதத்தின் நோக்கம். அது காட்டும் ஆவல் நிரம்பிய சாதகன், அஸத்திலிருந்து ஸத்திற்கு, (என்றும் நிலைக்கும் வஸ்துவிற்கும்), அஞ்ஞான இருளிலிருந்து ஞானப் பேரொளிக்கு, அழிவிலிருந்து அழியாத அமரத் தன்மைக்கு என்னை அழைத்துச் செல்'' என்று பிரார்த்திக்கிறான்.

உபநிஷதப் பாத்திரர்கள் பலரகமானவர். சிலர் குடும்பிகளாயிருந்து சாதாரண வாழ்க்கை வாழ்ந்தனர். சிலர் நாடாளும் மன்னராகவும், படை ஆளும் போர் வீரராகவும் இருந்தனர். இன்னும் சிலர் மனைவி, மக்கள், சீடர்களுடன், காடுகளில் சிறிய எளிய வீடுகளில் குருகுலம் நடத்தினார்கள். ப்ரஹதாரண்யக உபநிஷதத்தில் கூறப்படும் யக்ஞ வால்க்யர், இருமனைவிகளுடன், அவ்விருவருக்கும் பிரித்துத் தரப் போதுமான செல்வத்துடன் வாழ்ந்த ஓர் குடும்பி. தந்தையற்ற சத்ய காமன் தன் குருவின் பசுக்களை பன்மடங்கு பெருகுமட்டும் பரிபாலித்தான். அவன் தனது கடமையை செவ்வனே முடித்துத் திரும்பியதும், குரு பத்தினி அவன் மீது இரக்கம் கொண்டு, ஏனைய சீடர்களுடன் அவனுக்கும் ஆத்ம தத்துவ உபதேசம் புரியுமாறு குருவைத் தூண்டினாள்! இப்படியாக பல கதா பாத்திரங்கள் மூலம் நமக்கு அது உபதேசிக்கிறது.

உபநிஷதம் எதிர்மறை முறையில் 'ந-இதி-நேதி' என்று அனைத்தையும் களைந்து தள்ளி எஞ்சியிருக்கும் ஆத்மாவைச் சுட்டிக் காட்டுவதாக மாத்திரம் நாம் அறிகிறோம். ஆனால் அவைகளில் உடன்பாட்டு முறையும் கையாளப்படுகிறது. உலகம் முழுவதும் ஆனந்த மயம். ஆனந்தம் இல்லாத இடமில்லை. ஆனந்தமே ஆத்மஸ்வரூபம். ஆனந்தம் உலக முழுவதும் வியாபித்துள்ளதால் தான், பொருட்கள் தோன்றி ஆனந்தத்தில் வாழ்ந்து, ஆனந்தத்திலேயே கலக்கின்றன

---

ஊற்றுநீர் என்றும் உலகூட்டும் ஒண்மையொளி
போற்றுமுயிர் பல்லோர் புனிதகாப் பாகும்மே.

என்றும் தெளிவாகக் கூறுகிறது. அந்த ரிஷி "இவ்வுலகில் ஒரு கோடியேனும், ஒரு ஜீவன் எள்ளளவும் ஆனந்தமின்றி வாழ்தல் கூடுமோ?" என்று கேட்கிறார். காணும் பொருட்களால் இன்பம் பெற முடியுமா என்று இன்பத்தையே தேடிச் செல்லும் நாம் இதனை எங்ஙனம் மறுத்தல்கூடும்.

இன்றைய உலகம் விஞ்ஞான காலத்தில் வாழ்கிறது. விஞ்ஞானம் மனிதனது வாழ்க்கைக்கு இன்பம் தர எத்தனையோ நற்காரியங்கள் செய்துள்ளது. ஆனால் இவ் விஞ்ஞானம் நாம் வெகுவாக விரும்பும் 'அமைதி'யைத் தந்துள்ளதா? ஞானிகளான பெருமக்கள்' எல்லா உயிரும் ஒன்றே' என்று கூறும் தத்துவத்தை நிரூபித்து, அதில் தனது மாளிகையை விஞ்ஞானம் கட்ட முடியுமா? உலக சுகங்கள் எத்தனை அநுபவித்தாலும், ஏன், உலகையே கட்டி ஆண்டாலும், நமது உள்ளுலகமான உயிரை அது நமக்குப் பிடித்துத் தராது. இங்குதான் நமக்கு உபநிஷதத்தின் உதவி தேவையாகிறது' ப்ரேயஸ் (இந்திரியங்களை இன்பப்படுத்துவது) முடிவற்றது. மனது, சுகம் பெருகப் பெருக மென்மேலும் விரிந்துகொண்டே போகும். அதற்கு ஒருகாலும் திருப்தி ஏற்படாது. ஒரு பொருளிடத்துத் திருப்தி ஏற்பட்டது போலத் தோன்றினால், மனது வேறொரு புதுப் பொருளை நாடி, புது சுகத்தைத் தேடிச் செல்வதைக் காணலாம். எனவே இதற்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினால் உன்னுள் திரும்பிப் பார்' என்கிறது உபநிஷதம்

முதன் முதலில் யந்திரத்தின் மூலம் மனிதன் நெருப்பை ஏற்படுத்தினான். அவனை மிகப் பெரியவனாக உலகம் மதித்தது. அடுத்து நீராவியைக் கண்டு பிடித்தவனை வியப்போடு நோக்கியது. மின்சாரத்தைக் கண்டவனை மேதையாய் வணங்கியது. இன்று அணுவைத் துளைத்தவனை அவதார புருஷனே என்று பார்க்கிறது. செயற்கைச் சந்திரனைப் பறக்க விடுபவனை தேவதூதனாகக் கருதுகிறது. ஆனால், அவ்விஞ்ஞானிக்கு இவையனைத்தும் குழந்தை விளையாட்டாகத்தான் தென்படும் உலகில் புறத்தில்

---

மனநலத்தார் செய்கைமொழி மாஇன் பளிக்குமவர்
இனநலத்தார் என்றவரை ஏத்துமுளம் தாராயோ.

இருக்கும் சக்திகளை இவர்கள் தம் வசப்படுத்தி, தம் இசைக் கேற்ப ஆட்டுகின்றனர். புறச் சக்திகள் அனைத்தி லும் வலிமை வாய்ந்தது நம்முள்ளிருக்கும் 'சித்' எனும் உள்ளுணர்ச்சியாகும். இதன் பெருமையை யோகி ஒருவரே அடைவார். இதயத் துடிப்பையும் நாடித் துடிப்பையும் நிறுத்தி பரம்பொருளுடன் சுவபமாகக் கலந்து காட்டு கிறார். இஃது சித்தின் வலிவால் நிகழ்கிறது. சித்சக்தி ஒவ்வொரு ஆணிடத்திலும் பெண்ணிடத்தும் அடங்கி யுள்ளது. ஆனால் அதை உயரத்திலிருந்து ஓடிடும் நீர் போல வீணாக பல பாங்கில் செலவழிக்கிறோம். இவ்வாறு வீணாக்காது நமது லக்ஷ்யத்திற்காக அதனை செலவிட வேண்டும். மனிதன் குரங்கிலிருந்து முன்னேறி வந்தது உண்மையாயின், இதே மனிதன் மேம்பட்ட மனிதனாக, தெய்வ மனிதனாக ஏன் விரைவில் ஆகமுடியாது? நம்மை தெய்வ மனிதனாகும்படியே அறைகூவி அழைக்கிறது உபநிஷதம்.

நாம் உலகம் எனும் நாடக மேடையில், பல பாகங் கள் ஏற்று நடிக்கிறோம் என்ற உணர்ச்சி நமக்கு இருக்க வேண்டும். நமக்குப் பணிபுரியவென இந்திரியங்கள், மனம் எனும் நம் ஏவலாட்கள் உள்ளனர். இவர்களை முறையாக கட்டுப்படுத்தி நமக்கு உதவிடும் முறையில் பயன்படுத்தும் நல் எஜமானர்களாக நாம் மாறுதல் வேண்டும். வேலைக் காரர்களால் ஆளப்படுபவராகாது, அவர்களை ஆள்பவர் களாக இருத்தல் வேண்டும். அப்படிச் செய்தால், அக உலகம், புற உலகம் ஆகிய இரண்டும் நம் வசப்படும். நமது உள் சக்தியை, சித்சக்தியை முறையாக கட்டுப் படுத்தி, தேவையான பாங்கிலே செலவிடுவோமாக!

'நீ கேட்கும் பொருளெல்லாம் ஆத்மாவைப் பற்றிய தாய் இருக்கட்டும். நீ பார்ப்பதெல்லாம் அதுவாக இருக் கட்டும். நீ சிந்திப்பதெல்லாம் அவ்வாத்மாவாகவே, இருக்கட்டும். ஆத்மா ஒன்றையே அனவரதம் சிந்தித்து தியானிப்பாயாக" என்று உபநிஷதம் கோஷிக்கும் உத்தம உபதேசத்திற்குச் செவி சாய்ப்போமாக!

---

**ஊர்த்திருத்தம் கூறுமல் உள்ளம் திருந்ததமை**
**நேர்திருத்தம் செய்கின்றுர் நேர்மையெனக் கீவாயோ.**

# ஆறுபடை வீடுகளின் தத்துவ அமைதி

(திருப்புகழ் சதுரர் சே. த. ராமலிங்கம் பிள்ளை, B. A., B. T.)

## திருக்கழுக்குன்றம்

இத்தலம் நால்வர் பெருமக்களான சமய குரவர்கள் பாடல் பெற்றது. இது செங்கற்பட்டு மாவட்டத்தில் புகைவண்டி நிலையத்திலிருநது தென்கிழக்காக ஒன்பது மைல் தொலைவிலுளளது.

## பெயர்க் காரணம்

சம்புகுத்தன், மாகுத்தன் என்ற இரு முனிவர்கள் சகல கலைகளும் கற்றுத்துறை போனவர்கள். அவர்களுக்குள் சிவம் பெரிதா? சக்தி பெரிதா? என்ற வாக்குவாதம் ஏற்பட்டது. ஒவ்வொருவரும தாங்கொண்டதே முடிவெனச் சாதித்தனர். இதனால் நேர்ந்த பெரும்பாவத்தால் இவர்கள இரண்டு கழுகுகளாகச் சாபமேற்றனர். இவர்கள் இத்தலத்திலுள்ள மலைமேல் ஒரு தீர்த்தம் உண்டாக்கிப் பரமனை வழிபட்டுச் சாபம் தீர்ந்தனர் என்பது புராணம். இவர்கள் ஆக்கிய தீர்த்தத்தின் பெயரால் இத்தலத்திற்குப் 'பக்ஷிதீர்த்தம்' என்றொரு பெயருமுண்டு. அன்று கழுகானவர்கள் சாபநிலை நினைவுக்குறியாக ஒவ்வொரு நாளும் இந்த மலையில் இரண்டு கழுகுகள் வந்து (சண்டன், பிரசண்டன்; சம்பாதி, சடாயு; சம்பு, ஆதி என்ற கழுகுகளும் பூசித்தன.) உணவு கொள்கின்றன. ஆகவே இத்தலம் திருக்கழுக்குன்றம் எனப்பெயர் ஏற்றது.

## வேதகிரி:

இத்தலத்திலுள்ள மலைகள், நான்குபிரிவுகள்கொண்ட ஒரு தொடராயுள்ளன. காரணம் வேதங்கள் நான்கும்

---

**உள்ளம் திருந்தினரை ஊன்றி யினிதுணர்வம்**
**கள்ளமகல் அன்னரைக் கண்டாலும் இன்பாமே.**

மலைகளாய் நின்று மாதேவரைத் தாங்குகின்றன என்பது ஐதிகம். ஆகையால் இத்தலத்துக்கு வேதகிரி, வேதாசலம் என்ற திருப்பெயர்களும் உண்டு. இவ்விரண்டு வரலாறுகளையும் உணர்ந்த நம் திருப்புகழ் நாவலர், "கழுகுதொழு வேதகிரி" எனக் கூறுகிறார். இத்தலத்துக்குரிய தலவிருட்சம் வாழை; எனவே 'கதலிவனம்' என்றும் இத்தலத்தைக் கூறுவதுண்டு. இது வேதகிரி என்பதால் இங்குள்ள ஆலய வாயிலில் தேவர்கள் பெருந்திரளாய்க்கூடி எழுப்பும் வடமொழி தென்மொழி மறையொலிகள் கடலொலிபோல மாறாமல் கேட்கப்படும்.

"கழுகு தொழுவேத கிரிசிகரி வீறு
கதிருலவுவாசல — நிறைவானோர்
கடலொலியதான மறைதமிழ்க ளோது
கதலிவன மேவு—பெருமாளே"

## வேத வெற்பின் மேன்மை

நான்கு மறைகள் மலைகளாயுள்ளன, மறை தமிழ் ஒலிகள் நிறைந்துள்ளன என்பதால்தான், இங்கு வேத மந்திர முதலான பிரணவத்தின் பொருளை அறியாது தருக்கிய வேதனுக்கு வேதனை விளைத்துப்பின் அதன் பொருளை விளக்கிய வரலாற்றையும் அருணகிரியார் விதந்தோதுகிறார்.

"மறைவனை நீடு சிறை செய்தவன் வேலை
வளமை பெறவே செய்—முருகோனே"
"காது முக்ர வீரபத்ர காளி வெட்க—மகுடாமா
காசமுட்ட வீசி விட்ட காலர்பத்தி—இமையோரை
ஓதுவித்த நாதர் கற்க ஓதுவித்த—முனிநாண
ஓரெழுத்தி லாறெழுத்தை ஓதுவித்த—பெருமாளே"

(கொல்லும் கோபமுடைய வீரபத்திரகாளிதம்முடன் நடனஞ் செய்து வெட்கமடையும்படி, தமது முடி ஆகாசத்தை முட்டும்படி வீசி ஆடிய திருவடியுடையவரும், அன்புளம் கொண்ட அமரர்களுக்கு ஆரணமுரைத்த

---

கண்கண்ட தெய்வமெனக் காண்கின்ற பேரடியர்
விண்கண்ட மெய்ம்மைமனம் மேவினரென் றோர்ந்தேனோ

அண்ணலும் ஆகிய சிவனார் உம்மிடம் உபதேசங் கேட்கவும், சிவனாரிடம் பயின்ற அயனார் வெட்கமடையவும், சமஷ்டியான ஓரெழுத் தொருமொழியான பிரணவத்தில், வியஷ்டியாகவரும் பிரணவங்கூடிய திருவைந்தெழுத்து மான ஆறெழுத்தை ஓதி வைத்த பெருமாளே), மேலே போந்த வரலாற்றில் அறிவின் விளக்கம் குன்றிய அயனாரிடம் அறுமுகனார் தெய்த அருள் ஆடல் கூறப் பட்டுள்ளது.

இதுபோன்றே பிறவிக் கடலிற் புகுந்துழலும் பேதை மக்களது அறிவும் ஆற்றலும் குன்றிப்போம். அப் போதும் அயிலிறைவனது ஆறெழுத்தை நினைந்து 'குகா குகா' என்று தியானிப்பார் முன்னர், அருமைக் குகனின் அற்புத ஆடல் நிகழ்ந்து அருளூறம் காட்டும். இதனை,

"ஆசையிற் கைகலந்து சுமா சுமாபவ
சாகரததி லழுந்தி எழா எழாதுனம்
ஆறெழுதமதை நினைந்து குகா குகா எனும் வகைவராதோ"

என்று வேத வெற்புத் திருப்புகழ் விளக்குகிறது. இவை போன்ற கருத்துக்களால் நமது மனநிலை குன்றும்போது ஆடல் செய்த திறம் கூறப்பட்டது.

---

## சக மாயை

(கி. வா. ஜகந்நாதன்)

'மகமாயையைக் களைந்து அருள் வழங்கும் வல்லமை யுடைய முருகனுடைய உபதேசம் எனக்குக் கிடைத்தது. அவன் தன் முக மாறினுடைய தத்துவத்தையும் உணர்த்தி னான். அத்தகைய பேறு பெற்றும் நான் சக மாயையுள் நின்று கலங்குகிறேன்' என்று அருணகிரி முனிவர் வருந்து கிறார்.

புனிதநிறை சீலமுளர் பொன்மொழிகள் போற்றி
இனியஅவர் நல்நினைவு எற்கருளல் செய்வாயோ.

சக மாயையுள் தயங்குவதாவது என்ன? இதனை அவர் சொல்லுகிறார். இவ்வுலகில் வாழும் மனிதன் மாயையின் வலையில் பட்டு உழலுகிறான். ஆசையில் வீழ்ந்து அலமரு கிறான். மாயை அவனை ஆசைச் சேற்றில் அழுத்தித் துன் புறச் செய்கிறது. அந்த ஆசை பலவானாலும் அவற்றில் தலைமையானவை மூன்று என்று கண்டு மூவாசை என்று பெரியோர் வகுத்தனர். மற்ற ஆசைகள் யாவும் அந்த மூன்றனோடு சார்ந்தே இருக்கும்.

மண்ணாசை, பொன்னாசை, பெண்ணாசை என்பவையே மூவாசைகள். அவை மனிதனுடைய உள்ளத்தில் புகுந்து விட்டால் அவற்றை நிறைவேற்றுவதற்காகவே ஒவ்வொரு கணமும் முயற்சி செய்வான். ஓரளவு பொன்னை ஈட்டினால், அதோடு நிற்பதில்லை; மேலும் மேலும் ஈட்டவேண்டும் என்று ஆசை வளர்ந்து கொண்டே போகும். அப்படியே மண்ணாசை கொண்டோரும் மேலும் மேலும் பல நிலப் பரப்புகள் தம் ஆட்சியின் கீழ் வரவேண்டுமென்று எண்ணி அதற்குரிய ஆயத்தங்களைச் செய்துகொண்டே இருப்பார்கள். பெண் ணாசையைப்பற்றிச் சொல்ல வேண்டியதே இல்லை. 'பெண் இன்பத்தை முற்றப் பெற்றேன்; அதுபற்றி இனி என் மனத் தில் ஒரு குறையும் இல்லை' என்று சொல்வார் யாரும் இல்லை. வானுலக அணங்குகள் அனைவர்பாலும் இன்பம் புணரும் இந்திரன், மீட்டும் அகலியை நோக்கி வருகிறான்.

அருணகிரியார் மண் ஆசையை வேறு ஒரு வகையில் சொல்கிறார். மன்னர்களுக்குத் தான் நாடு பிடிக்கும் ஆசை. மற்றவர்களுக்கு நிலம் பிடிக்கும் ஆசை இருக்கிறது. தான் வாழ ஒரு வீடாவது இருக்கவேண்டும் என்று ஆசை கொள் ளார் இல்லை. ஆதலின் மண்ணாசை என்று சொல்லாமல் வீட் டாசை என்கிறார். 'அகம், மாடை, மடந்தையர் என்று அய ரும் சகமாயை' என்று சகமாயைக்கு விளக்கம் சொல்கிறார். இருக்க வீடு, உண்ணவும் உடுக்கவும் வேண்டியவற்றை வாங்கப் பொருள்; இன்புற்று வாழ மடந்தை என்னும் மூன் றுக்குள் உலக வாழ்வு அடங்கிவிட்டதென்றுதானே யாவரும் நினைக்கிறார்கள்? அகம் என்பது வீடு. மாடை என்பது பொன்.

---

**வாய்பேசும் வார்த்தையெலாம் வாய்மை என ஆகத்**
**தாயாய் எனதுளத்தில் தற்பரநீ தங்குதியோ.**

மடந்தையர்—பெண்கள். மண்ணாசையின் வேறு உருவம் அகம் என்று ஆசைபட்டு அயருதல். பொன்னாசையே மாடையைத் தேடி அலைந்து வாடுதல். மடந்தையராசையை மூன்றாவதாகச் சொன்னார்.

இந்த மூன்றும் வேண்டும் என்று எண்ணி இவற்றிற்காக மனிதன் அயர்கிறான். அயர்தல்—மறந்து போதல்; அல்லது சோர்தல். எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாமல் சோர்ந்து போகிறான் மனிதன். அதற்குக் காரணம் இந்த மூன்று ஆசைகளும்.

நாம் பிறக்கும்போது வருவது இந்த உடம்பு; இது உயிர் வாழும் இல்லம். இதுவே ஒரு பிறவியில் இருக்கும்; பின்பு அழிந்துவிடும். இந்த உடம்பு வாழ மற்றொரு வீட்டை நாடுகிறோம். அது எவ்வளவு நாளைக்கு இருக்கும்? இந்த வீடு உடம்பு வாழும் வீடு; உடம்போ உயிர் வாழும் வீடு. இந்த இரண்டுமே அழியும் தன்மையுடையவை. அழியாத தன்மையையுடைய அகம் அல்லது வீடு ஒன்று இருக்கிறது. அதுதான் உயிர் என்றும் மாறாமல் இருந்து வாழ்வதற்குரியது. அந்த அகத்தைப் பெறவேண்டும் என்று முயலாமல் அயர்கிறோம்; உலகில் வாழும் வீட்டின்மேல் ஆசை மிகுதியாகிறதேயன்றி அந்த வீட்டைப்பற்றி நினைப்பதில்லை.

அப்படியே பொன்னாலும் பொருளாலும் யாவும் பெறலாம் என்று நினைக்கிறோம். அவற்றைப் பெற்றவர்கள் அமைதியாக வாழ்கிறார்கள் என்று சொல்ல இயலாது. ஒருவனிடம் பொருள் என்றும் நிலையாக இருக்கும் என்றும் சொல்ல முடியாது. எல்லா இன்பத்துக்கும் காரணமானதும் என்றும் நிலையானதுமான ஒன்று இருந்தால் அதைப் பெற நாம் முயலவேண்டும். இறைவன் அருள் அத்தகையது. அதை மறந்துவிட்டுப் பொன்னுக்காக அழுகிறோம்,

புலனுக்குரிய இன்பத்திலே நாம் மயங்கி விடுகிறோம். மடந்தையரால் வரும் இன்பமே மிகச் சிறந்ததென்று நினைக்கிறோம். இது சிற்றின்பம். பேரின்பம் ஒன்று உண்டு. அது என்றும் மாறாத ஆனந்தம், அதையே முக்தியின்பம் என்

---

**ஏழை எனதுளத்தில் என்றும்நீ சான்றாக**
**வாழும் வகையுணர்த்தி வளர்விப்ப தென்றேயோ.**

புார்கள். அதனை மனைவியாக உருவகம் செய்து கூறுவ துண்டு. அந்த இன்பத்தை அயர்ந்து மடந்தையரை நினைந்து வாடுகிறோம்

இந்த மூன்று வகை ஆசையினால் உண்மையான வீட்டை யும், அருளையும், பேரின்பத்தையும் அயர்ந்து வாடுகிறோம். முருகன் ஆறுமுகநாதனாக எழுந்தருளி, எளிதில் என் அருளைப் பெறலாம் என்ற உண்மையை உணர்த்திய பின்னரும் அப் படி வாடலாமா? கூடாது அல்லவா? இதை நினைந்தே அருண கிரி பாடினார்.

மகமாயை களைந்திட வல்லபிரான்
முகமாறும் மொழிந்தும் ஒழிந்திலனே !
அகம்மாடை மடந்தையர் என்றயரும்
சகமாயையுள் நின்று தயங்குவதே !

[மகத்தான சுத்த மாயை அசுத்த மாயைகளைக் களைந்து இன்பம் வழங்கு உபகாரியாகிய முருகன், தன் முகங்கள் ஆறினுடைய தத்துவத்தையும் அடியேனுக்கு உணர்த்திய பின்பும், வீடு, பொன், பெண் என்று ஏங்கிச் செய்யவேண்டி யதை மறக்கும் பிரகிருதி மாயைக்குள் நீங்காமல் நின்று கலங்குவதை நான் இன்னும் ஒழியவில்லையே!]

---

சோமநாதன் மடம்

# திருப்புகழ் விரிவுரை

(குகஸ்ரீ)

ஒருவழிப டாது மாயை யிருவினைவி டாது நாளும்
உழலுமநு ராக மோக அநுபோகம்—
உடலுமுயிர் தானு மாயுன் உணர்விலொரு காலி ராத
உளமுநெகிழ் வாகு மாறு அடியேனுக்;

---

மூச்சடங்கும் முன்னே முதல்வா நீ போந்தென்முன்
பேச்சில்லா ஞானமழை பெய்வித்தல் என்றேயோ.

இரவுபகல் போன ஞான பரமசிவ யோக தீரம்
எனமொழியும் வீசு பாச களகோப—
எமபடரை மோது மோன உரையிலுப தேச வாளை
எனதுபகை தீர நீயும் அருள்வாயே;
அரிவையொரு பாக மான அருணகிரி நாதர் பூசை
அடைவுதவ றாது பேணும் அறிவாளன்—
அமணர்குல கால னாகும் அரியதவ ராஜ ராஜன்
அவனிபுகழ் சோம நாதன் மடமேவும்;
முருகபொரு சூரன் சேனை முறியவட மேரு வீழ
முகரசல ராசி வேக முனிவானே—
மொழியுமடி யார்கள் கோடி குறைகருதி னாலும் வேறு
முனியஅறி யாத தேவர் பெருமாளே.

(அரிவையர்கள்............முருக!)

(பதவுரை) அரிவை ஒரு பாகம் ஆன அருணகிரிநாதர் பூசை- அமலையை ஒரு பாகம ஆக்க் கொண்ட அண்ணமலையார் வழி பாட்டை;

அடைவு தவறாத பேணும் அறிவு ஆளன்-விதிமுறை வழுவா மல் விரும்பி மேற்கொண்ட பரம ஞானியும்;

அமணர் குல காலன் ஆகும் அரிய தவ ராஜ ராஜன் - அமணர் குலத்திற்கு யமன் ஆகிய அருமையான தவ வேந்தர் தலைவனும்;

அவனி புகழ் சோம நாதன் மடம் மேவும் முருக - உலகம் புகழ்ந்து உரைக்கும் சோமநாதர் திருமடத்தில் எழுந்தருளி யிருக்கும் இளம்பரி பூரண;

(பொருசூரர்...............முனிவோனே)

பொரு சூரர் சேனை முறிய - போரிடுகிற சூரபன்மனுடைய சேனை (களாகிய அவுணர்கள்) முழுதும் அழியவும்;

வடமேரு வீழ - வடதிசையில் உள்ள மேரு மலை (துகளாகிச்) சரியவும்!

முகர சல ராசி வேக முனிவோனே - ஆரவாரிக்கும் நீர்ப் பெருக்கான கடல் கொதிப்பேறி வற்றவும் முனிந்த முதல்வனே!

(மொழியும்.........பெருமாளே)

---

மனித இனத்தை மகிமைப் படுத்தும்
புனிதபுண்ய தேசதனல் பூரணத்தைச் செய்வாயோ.

மொழியும் அடியார் கோடி குறை கருதினும் -(அன்பொடு) பாடும் (சிறந்த) அடியார்கள் எண்ணிலாத (வாழ்க்கைக்) குறைகளை எண்ணி வருந்தினும்;

வேறு முனிய அறியாத தேவ பெருமாளே - (அதற்காக) வேறுபட்டு (அவர்கள மேல்) கோபிக்க அறியாத (அருட் கடலான) தேவனே; பெரியோனே!;

(ஒருவழி..............அநுபோகம்)

ஒரு வழி படாது மாயை - ஒரு வழியாக வராமல் (பலமுக மாகப்) படாகிறது (பாழ்த்த) மாயை—;

இரு வினை விடாது - (நல்வினை தீவினை யெனும்) வல்வினைகள் விட்டு விலகுவதாக இல்லை;

நாளும் உழலும் அநுராக மோகம் - எந்நாளும் உழற்சி தருகிற காம லீலையான மோக அவஸ்தையே;
அநுபோகம் - (வாழ்க்கை) அநுபவமாக வாய்த்தது;

(உடலும் உயிர்....................அருள்வாயே)

உடலும் உயிர் தானும் ஆய் - உடம்பும உயிரும்போல் அத்து விதம் ஆகி;

உன் உணர்வில் ஒரு கால் இராத உளம் நெகிழ்வு ஆகும் ஆறு - உன் உணர்வு (எனும் தியானத்தில்,) ஒரு போதும் உறவு கொள்ளாத உள்ளம் நெகிழ்ந்து உருகும்படி;

அடியேனுக்கு - எளிமையான இந்த அடிமைக்கு;

இரவு பகல் போன ஞான பரமசிவ யோகதீரம் என மொழியும் - இருளான மறதியும், பகலான நினைவும் இல்லாத (அருள) ஞானம் (தரும்) மேலான சிவயோக தைரியம் என்று சொல்லப் பெறுவதும்;

வீசு பாச கன கோப யம படரை மோதும் - பாசம் வீசு கின்ற உறுதத கோபம் உடையவர்களான இயம தூதுவர்களை மோதி விரட்டுவதும் ஆன.

மோன உரையில் உபதேச வாளை - மோன மொழிகளில் உபதேசம் எனப்பெறும் வாளாகிய ஒளியை;

எனது பகை தீர நீயும் அருள்வாயே - எனது (அகப்பகை புறப்) பகைகள் அழிய நீயும் அருள் புரிவாயாக, (எ-று).

---

எல்லாம் உதவுகின்ற இன்பத் திருநாவால்
வல்லாளா ஓர்சொல் வழுத்தியருள் செய்யாயோ.

விளக்கம்

அரிவை - பருவம் குறியாமல், பாதித் திருமேனியள் எனும் தொனிப் பொருள கொண்ட திருப்பெயர். இத்தேவி, ஐந்தெழுத்தில் உள்ள வகர வடிவி.

"யஸ்யஸா பரமா தேவீ சக்திராகாச ஸம்ஜ்ஞிதா!" எவர்க்கு யாதொரு பரம சக்தியுளதோ, அச்சக்தியார் ஆகாயம் எனப் பெறுவர் எனக் கூர்ம புராண உத்திரபாக 31-ஆம் அத்தியாயம் உரைப்பதை இங்கு எண்ணிக் கொளல் நலம்.

"உமையலாது உருவம் இல்லை" என்றார் அப்பர் அடிகள.

அருணம - சிவப்பு, கிரி - மலை; நாதர் - அருள்நாத சொரூபர் எனும் பொருட்டு. எனவே, செஞ்சோதி மலைமேல் சிறந்த நாதமாச் சிறந்தவர் என்பது குறிப்பு; இவர் சிறந்த ஐந்தெழுத்தின் முதலான சிகர சொரூபர்.

"அடைவு தவறாது பேணும் அறிவானது" என்பதில், அடைவு - அடுத்து அடுத்துச செய்ய வேண்டிய வழிபாட்டு வகை.

பேணும - விரும்பிப் புரியும். அறிவாளன் - அரிய சிவ ஞானத்தை ஆட்சியில் வைத்தவர்.

அமணர் - ஆடையிலாத சமண சமயத்தாரைக் குறித்த பெயர்.

தாவும் - (பரம பிதாவை நினைந்து மேல் நோக்கித) தாவும் உணர்வுநிலை.

ராஜ ராஜர் - மன்னதி மன்னர்; இவர்கள் சடா மகுடம் பூண்ட சதுரப் பாட்டினர்.

அவநி - வடசொல்; காப்புடைய நிலதலம எனும் பொருளது.

"உலகம் என்பது உயர்ந்தோர மாட்டு" என்பது விதியாதலின், 'அவநி புகழ்' என்பது, உயர்ந்தவர் புகழ்ந்து ஓதும் எனும் பொருளில நின்றது.

சோமநாதர் மடம் - ஆரணி தாலூகாவி லிருக்கும் புதனூர் எனும் தலததில இருக்கிறது.

அண்ணாமலையார் இவர் வழிபட்ட ஆத்மார்த்த மூர்த்தி. அப்பெருமானை ஆகம விதிப்படி ஆராதித்தவர். சமண சமய கண்டனம் செய்தவர்: தவராஜ சிங்கம் எனப் பாராட்டப் பெற்றவர்.

அன்பரான இவர், புத்தூரில் ஒரு திருமடம் அமைத்தார். அதில் எம்பெருமான் முருகனை எழுநதருளப் பண்ணினர். அம்

---

மறியாம் மனத்தை மடக்கிபர மாத்ம
அறிவான ஆக்கத்தை நாவிற் கருளுதியோ.

மூர்த்தியை, வழுத்திப் பலகாலம் வழிபட்டார். சோம நாதர் மடத்தில் இருந்த முருகசுவாமி சேவித்து உயர்ந்த அருணை முனிவர்,

''சோம நாத மடம் மேவும் முருக'' என்று சிறக்கப் பாடும் பகுதியைச் சிந்திக்கும் போதே, உடல் இன்பம் கொண்டு சிலிர்க்கிறதே!

முனியாத முருகன் முனிய நேர்ந்தபோது, சூர சேனை முறிந்தது; தலை குப்புற்று மேரு மலை, தவிடுபொடி யாகியது; வாம்பிலாக் கடலும் வறறியது எனலை, ''முறிய-வீழ-வேக-முனிவோனே'' எனும் அருமை இங்கு எண்ணத் தகும்.

வாழ்க்கையில் உள்ள குறைகட்கு வரம்பே யில்லை. அவைகளைப் பொருட்படுத்தாமையே அறம். அங்ஙனின்றி இப்படி ஒரு குறை! அப்படி ஒரு குறை; இப்படியும் அப்படியுமாக ஒரு குறை.

இவைகளை இடையறாது எண்ணுவரேல நிறைமனம் இல்லாதார் என்ற குறைவரும். இந்தச்சரிப்பை அறிந்து சினக்குமோ செவ்வேள்? அதுதான் இல்லை.

பகையானவர் அழிய முனியும் அத்தன், அன்பரை முனியவே அறியான்; இதை இறுதியடியில எண்ணுகின்ற அருமையே அருமை.

அவர்கள் எண்ணம் நிறைவேற அருள்பவன் என்பதை, 'பெருமாளே' எனும் கம்பீர விளியாலும் காட்டினார்.

## ஒரு வழி படாது மாயை

மாயை போல் தோற்றம் காட்டுவது அன்றி, உண்மையில் மாய்வதல்ல மாயை. மாய் + ஆ + மாயா.

இப்படித் திரும்பினால் தாய்; அப்படித் திரும்பினால் தந்தை; உடன் பிறந்தார், சுற்றத்தார்,

அதன் வேறு ஒருதிருப்பத்தில் மனைவிமக்கள்; பேரன் பேத்தியர்; சம்பந்திகள்.

மற்றும் அதன் வேறு ஒரு ஆட்சியில்,

செல்வம், வறுமை, குலம், மொழி முதலியவைகளை, கால தத்துவத்திற்குத தக்கபடி காட்டிக் காட்டி ஏய்க்கும் அதன் திறமே திறம்.

மரணம் வந்து கண்மூடிய பின், இந்த உறவெலாம மறைந்து விடும்.

---

வாயின் இருகதவாய் வாய்த்த உதடுகளை
மூய்தல்செய் தேஞான மோனத்தைத் தாராயோ.

பின் வேறு ஒரு இடத்தில் பிறப்பு' அந்த இடத்திற்குத் தக்க படி உறவின் சூழ்நிலை. இப்படியே மாறி மாறி நடைபெறுகிறது, மாயா நடனம்.

பாவ புண்ணியம் காட்டும் ஊழ் வினைகள் இரண்டு. நல்வினை தீவினை என்னும் அவைகள் என்றும் என்னை விடுவது இல்லை.

மாயையால் வந்த மயக்கம்; இருவினையின் இறுக்கம்; இந்த இரண்டாலும், காம லாகிரியில் காலாழ்கிறேன். எநதப் பிறப்பிலும் இதுதான் அநுபவம்.

உடலும் உயிரும் போல, நீ என் உணர்வில் ஒன்றுபட்டிருக்க வேண்டும்; இதுதானே அத்துவித சித்தி.

அங்கிலே நேர, என்னையும் பொருளாக்கி அணுகி, எளிய என் உள்ளம் நெகிழ்வடைய உபதேசம் செய்தருளும்!

மறதி நினைவு; மரணம் பிறப்பு; கேவலம் சகலம்; துயில் விழிப்பு என்றெல்லாம் பரியாய நாமத்தால் பகரப் பெறும் அங்கிலே அகல அருள்!

> "இரவுபகல் அற்ற இன்ப வெளியூடே
> விரவி விரவிநின்று உந்தி பற"

என்று இதனை சிறக்க உரைப்பது சித்தாந்தம்.

இரவு பகல் அற்ற சிறந்த ஞானமே சிவஞானம்.

அந்த ஞானத்தால வினையும் தெய்வ சிவயோக தீரம் எனப் பெறும் சிறந்த உபதேசம் செய்தருள்!

இயம தூதர்களை விரட்டுகின்ற மோன உபதேச அநுபவத்தை ஓதியருள்!

மோனம்—மனம்மடங்கி அமர்கின்ற பெருநிலை.

சொல்லாத வார்த்தையான மோன உபதேசமான ஒளிவாளை உதவியருள! பெருமானே!

தனி ஞானவாள் கொண்டு, அகப்பகை புறப்பகைகளை அறுக்கும்படி அருள்! என்று விநயமாக விண்ணப்பித்தபடி.

வாழ்க திருப்புகழ்வளம்

---

அளவாகிப் பேசு அதிகம்கேள் என்றே
உளவாக ஈர்செவியோ டோர்வாயும் ஈந்தாயோ.

# சிறுத்தொண்ட நாயனர்

(கி. வா. ஜ.)

சோழ நாடு என்ருல் நீர் வளம் நிலவளத்துக்குக் கேட்கவேண்டுமா? திருச்செங்காட்டங்குடி காவேரித் திரு நாட்டில் உள்ளது என்று சொன்னாலே போதும்; அதன் வளத்தைத் தனியே எடுத்துச் சொல்ல வேண்டாம்.

அந்த ஊரில் பரம்பரை பரம்பரையாக அரசனுக்கு மந்திரியாகவும் சேனைத் தலைவராகவும் உள்ள மாமாத்திரர் குலத்தில் உதித்தவர் பரஞ்சோதியார் என்னும் சிவ பக்தர். ஆயுர்வேதக் கலையில் அவர் மிக்க திறமை படைத்தவர். வடமொழித் தேர்ச்சியும் உள்ளவர். படைக்கலப் பயிற்சி, ஆனையேற்றம், குதிரையேற்றம் ஆகியவற்றிலும் அவர் பேராற்றல் உடையவராக விளங்கினர்.

இத்தனை கலைகளிலும் பயின்று திறல்பெற்ற அவருடைய உள்ளம் எப்போதும் சிவன் கழலையே சிந்திக்கும் இயல்புடையதாக இருந்தது. சிவனடியார்களிடம் பெரு மதிப்பு வைத்து வழிபட்டு அடியார் தொண்டிலும் சிறந்து நின்றார். அரசனுக்கு அவர் மிக நெருங்கியவராய், அவருக்கு வேண்டும்போதெல்லாம் துணையாகச் சென்று போர் செய்து பகைஞரைப் புறங்கண்டு வருவார். ஒரு முறை வடக்கே வாதாவிக்குச் சென்று அங்குள்ள மன்னரைப் போரில் வென்று அங்குள்ள நிதிக் குவைகளைச் சோழ நாட்டுக்குக் கொண்டுவந்து அரசன் முன் வைத்தார். வட புல மன்னன் படைப் பலம் மிகுதியாக உடையவன். அவ்வளவு பெரிய மன்னனைப் போர் வென்று வந்த பரஞ்சோதியாரை மன்னனும் பிறரும் பாராட்டினர்கள்.

"நம்முடைய படைக்கு இத்தனை வலிமை உண்டு என்று நானே நம்பவில்லை" என்ருன் அரசன்.

---

**உள்ளத்தால் ஊன்றிக் கேட்ட துணர்தியென**
**வள்ளால்நீ அந்தக் கரணத்தை வைத்தாயோ.**

"நம் படை வலிமை காரணம் அன்று; படைத் தலைவராகச் சென்ற பரஞ்சோதியாருடைய வலிமைதான் இந்த வெற்றிக்குக் காரணம்" என்றார் ஓர் அமைச்சர்.

"அவருடைய உடற்பலமும் படைக்கலப் பயிற்சிப் பலமுங்கூடக் காரணமன்று" என்று ஓர் அமைச்சர் சொன்னார்.

"அது என்ன, அப்படிச் சொல்கிறீரே; அவருக்குத் தேர்ந்த படைக்கலப் பயிற்சி இருப்பதனால்தானே இந்த வெற்றி கிடைத்தது?" என்று கேட்டான் அரசன்.

"அவர் இந்தப் படைகளை நம்புகிறவர் அல்ல. இறைவனுடைய திருவருட் பலத்தை நம்பி வாழ்கிறவர். அந்த வலிமையினால் அவர் எந்தச் செயலை மேற்கொண்டாலும் வெற்றி உண்டாகும். இறைவன் அன்பராகிய அவருக்கு இணையாகச் சொல்ல யார் இருக்கிறார்கள்" என்று மற்றோர் அமைச்சர் கூறுவதைக் கேட்ட மன்னன் சிறிது யோசனையில் ஆழ்ந்தான்.

"பரஞ்சோதியார் சிவனடியார் என்று சொன்னீரே! அவருக்கு எப்படிப் படைக்கலப் பயிற்சி கைகூடியது?"

"தம் கடமையை நன்றாகச் செய்யத் தெரிந்தவர் அவர். எந்தச் செயல் செய்தாலும் இறைவனடியை மறவாத சீலர்" என்றார் அமைச்சர்.

"அத்தகைய பெரியவரை நாம் கடவுளைப் போல வைத்து வழிபடுவதைவிட்டு, போர் செய்ய அனுப்பியது தவறு. அவரை ஏவல் கொள்ள நாம் யார்?" என்று சொல்லிய அரசன் பெருமூச்சு விட்டான்.

பரஞ்சோதியாரை அழைத்துவரச் செய்து, அவர் அடி பணிந்து, "தங்களைப் போர்முனைக்கு அனுப்பிய என் பேதைமையைப் பொறுத்தருள வேண்டும். தங்கள் பெருமை இத்தனை காலம் எனக்குத் தெரியாமற் போயிற்று" என்று இரங்கினான் அரசன்.

பரஞ்சோதியார் மன்னனெதிர் வணங்கி, "எனக்கு எந்தத் தொழிலில் உரிமை உண்டோ அதனை நான் செய்

---

செவிக்குணவாம் செய்தி சிந்தைக் குரியதெனப்
புவியிற் புனிதவுரை கேட்கப் புணர்த்துதியோ.

தேன். அப்படிச் செய்வது என் கடமை அல்லவா? அதில் என்ன தீங்கு எனக்கு உண்டாகும்!'' என்று பணிவுடன் கூறினர்.

அரசன் அவரைக் கும்பிட்டு, "இனித் தங்களுக்கும் இறைவனுக்கும் இடையே நான் ஏவல் இடமாட்டேன். தங்கள் விருப்பப்படியே இருந்து எங்களுக்கு அருள்புரிய வேண்டும்'' என்று சொல்லி, பொன்னும் பொருளும் வழங்கினன். அவர் வாழ்க்கைக்கு ஒரு குறையும் வாராத வண்ணம் இறையிலி நிலங்களை அளித்தான்.

"இதுவும் இறைவன் திருவருள்!'' என்று எண்ணிய பரஞ்சோதியார், அவ்வூரில் உள்ள கணபதிச்சுரம் என்னும் திருக்கோயிற்குச் சென்று வழிபட்டுச் சிவபக்தியிலும் அடியார் பக்தியிலும் மேனமேலும் சிறந்து நின்றார். பின்பு நல்ல குடியிலே பிறந்த வெண்காட்டு நங்கையென்னும் பெருமாட்டியை மணந்து இல்லறத்தை முறைப்படி நடத்தத் தொடங்கினர். ஒவ்வொரு நாளும் சிவனடியாரைப் பணிந்து அவர்களுக்கு உணவூட்டிப் பின்பே உண்ணும் வரையறையை மேற்கொண்டார். அவருடைய விருப்பத்துக்கு இசைந்தவாறே வெண்காட்டு நங்கையாரும் வேண்டுவன செய்ய அவர்களுடைய இல்லறம் ஏதாலும் குறைவின்றி நன்கு நிகழ்ந்து வந்தது.

புகழாலும் நிலையாலும் பலர் போற்ற வாழ்ந்த பரஞ்சோதியார், அடியார்களிடம் மிகவும் பணிவாக ஒழுகி அவர்களிடம் பயபக்தியோடு பழகினர். எல்லாவற்றிலும் பெரியவராகிய அவர் சிறியவரைப் போல அடங்கி ஒடுங்கியிருத்தலைக் கண்டவர்கள் அவரைச் சிறுத்தொண்டர் என்று அழைக்கத் தலைப்பட்டனர்.

இறைவன் திருவருளால் சிறுத்தொண்டருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அதற்குச் சீராளன் என்று திருநாமம் புனைந்து மிகச் செல்வமாக வளர்த்து வந்தார். அந்த அந்தப் பருவத்துக்கு ஏற்ற சிறப்புகளைச் செய்து குழந்தையைச் சிறுத்தொண்டரும் அவர் மனைவியாரும் வளர்த்து வந்தனர். சீராளன் பள்ளிக்குச் செல்லும் பருவத்தை

---

ஓர்ந்தினிய ஓதி உயர்மொழிகள் கேட்டின்பம்
சார்ந்தடியார் தாள்பற்றும் சால்புணரச் செய்குதியோ.

அடையவே, பெற்றோர் அவனைப் பள்ளியிற் சேர்த்து, அவன் கல்வியிற் சிறந்து வளர்வதை அறிந்து இன்புற்றனர்.

இவ்வாறு இருக்கையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார் ஒருமுறை அந்தத் தலத்திற்கு எழுந்தருளினார். அவரை வணங்கி வழிபட்டு அன்பு செய்து இன்புற்றார் சிறுத்தொண்டர். சம்பந்தப் பெருமான் சிறுத்தொண்டரைத் தம் திருப்பதிகத்தினிடையே சிறப்பித்துப் பாடிச் சில நாள் அங்கே தங்கிப் புறப்பட்டார்.

சிவபெருமான் சிறுத்தொண்டருடைய அன்பை நுகர்வதற்கும் அவருடைய பெருமையை உலகம் அறியும்படி செய்வதற்கும் திருவுளங்கொண்டு பைரவத் திருக்கோலம் பூண்டு திருச்செங்காட்டங்குடியை அடைந்தார்.

சிறுத்தொண்டருடைய வீட்டைத் தேடிச் சென்ற பைரவர் அவர் வீட்டுக்குள் புகுந்து, "சிவனடியவருக்கு உணவளிக்கும் சிறுத்தொண்டர் வீட்டில் இருக்கிறாரோ?" என்று கேட்டார். அப்போது அவ்வீட்டில் ஏவல்புரியும் சந்தனமென்னும் பெயருடைய நங்கை அவரைக் கண்டு, சிவனடியாரென்றறிந்து வணங்கி, "அவர் சிவனடியார்களைத் தேடிக்கொண்டுதான் போயிருக்கிறார். வந்துவிடுவார். தாங்கள் உள்ளே எழுந்தருள வேண்டும்" என்று கூறினாள்.

பெண்கள் மட்டும் உள்ள இடத்தில் நாம் வருவதில்லை" என்று சொல்லிப் புறப்படும்போது, சிறுத்தொண்டர் மனைவியாராகிய திருவெண்காட்டு நங்கையார் வந்து, "இதோ அவர் வந்துவிடுவார்; தாழ்க்கமாட்டார்" என்று சொன்னார். "நாம் சிறுத்தொண்டரைக் காணுவதற்காக வந்தோம். அவர் இல்லாத சமயத்தில் இங்கே இருக்கமாட்டோம். இவ்வூர்த் திருக்கோயிலில் உள்ள ஆத்திமரத்தின் கீழ் இருக்கிறோம். அவர் வந்தால் சொல்லுங்கள்" என்று சொல்லி அவர் போய்விட்டார்.

சிறிது நேரங் கழித்துச் சென்று சிவனடியார் யாரையும் காணமல் வாட்டத்தோடு வந்த சிறுத்தொண்டரிடம்

---

**உணர்வுநலம் கமழ்ந்த உயர்மொழிகள் கேட்டின்பம்**
**அணர்வுபெறச் செய்தென்னை ஆண்டருள வாராயே.**

அவர் மனைவியார், பைரவத் திருக்கோலத்திலிருந்த அடியார் வந்துபோன செய்தியைத் தெரிவித்தார். உள்ளங் களிகூர்ந்த அவர் உடனே திருக்கோயில் சென்று பைரவரைக் கண்டு நின்றார்.

அப்போது பைரவர், "நீர் தாம் பெருமை பெற்ற சிறுத்தொண்டரோ?" என்று கேட்டார்.

"அடியேனுக்கு ஒரு தகுதியும் இல்லாவிட்டாலும் அந்தப் பெயரால் அன்பர்கள் அழைப்பதுண்டு. இன்று சிவனடியார் யாரையும் காணவில்லையே என்று வருந்தியிருந்த எனக்கு நீங்கள் கிடைத்தீர்கள். அடியேன் இல்லத்துக்கு வந்து அமுது செய்ய வேண்டும்" என்று பணிந்து வேண்டினார் சிறுத்தொண்டர்.

"நாம் வடநாட்டில் உள்ளோம். உம்மைக் காண வந்தோம். எமக்கு வேண்டிய உணவை வழங்குதல் உம்மால் முடியாது"

"சிவனடியார்களுக்குக் கிடைக்காத பொருளும் உண்டோ? தங்களுக்கு எந்தவகை உணவு வேண்டும் என்று அருளுங்கள்."

"நாம் ஆறுமாதம் உண்ணுமல் இருந்து பிறகு பசுவை அடித்து உண்ணுவது வழக்கம். இன்று அப்படி உண்ண வேண்டிய நாள். உம்மால் அப்படிச் செய்ய முடியாது."

"என்னிடம் ஆடுமாடு எருமையென மூன்று நிரைகளும் இருக்கின்றன. தேவரீருக்கு எத்தகைய பசு வேண்டுமோ, அதைத் தெரிவித்தால் வீட்டுக்குச் சென்று அதனை அமைக்கச் செய்துவிட்டுக் காலந் தவருமல் இங்கே வந்து அழைத்துச் செல்வேன்."

"சொன்னுல் உமக்கு வினோதமாக இருக்கும். நாம் உண்ணுவது பசுமாடு அன்று; நரபசுவையே உண்போம். ஐந்து பிராயமுள்ள குழந்தையாக உடம்பில் மறு ஏதும் இல்லாதவனுக இருக்க வேண்டும். இன்னும் சொல்வதைச் சொன்னுல் நீர் வருந்துவீர்"

---

ஈனமொழி யாடி இழிவுபட்டுப் போகாமல்
ஞானமொழி கேட்பித்தே நான்போக வையாயோ.

''அருமையான பொருள் ஏதும் இல்லை. விரைவில் தாங்கள் சொல்லவேண்டும்.''

''ஒரு குடிக்கு ஒரு மகனாக உள்ளவனைத் தந்தை அரியத் தாய் பிடிக்க வேண்டும் அவர்கள் மனமுவந்து கறி சமைத்துத் தந்தால் அதை நாம் இட்டு உண்போம்'' என்றார் பைரவர்.

''இது எனக்கு அரிதன்று; அப்படியே செய்வேன்'' என்று கூறி விடை பெற்றுக்கொண்ட சிறுத்தொண்டர், நேரே வீடு சென்றார். சென்று தம் மனைவியாரை அழைத்து, ''தொண்டர் பிரான் நம் இல்லத்தில் அமுது செய்யத் திருவுள்ளம் இசைந்தார். ஐந்து பிராயமுடைய வனாய், ஒரு குடிக்கு ஒரு மகனாய், உறுப்புக் குறைவு இல்லாதவனாக உள்ள குழந்தையைத் தாய் பிடித்துக் கொள்ள, தந்தை அரிந்துதர, கறி சமைத்துக் கொடுக்க வேண்டுமாம்.''

''அப்படி ஒரு சிறுவனை எங்கே பெறுவது?'' என்று கேட்டார் நங்கையார்.

''இத்தகைய மைந்தன் ஒருவனை விலைகொடுத்தால் கூடத் தரமாட்டார்கள். அப்படி அளித்தாலும் தாயும் தந்தையும் இருந்து அரிய மாட்டார்கள். நீ பெற்ற பிள்ளையைத்தான் அழைத்துவர வேண்டும்'' என்றார் சிறுத்தொண்டர்.

இல்வாழ்வுக்குத் துணையாக நின்ற அப்பிராட்டியார் சிறிதும் தடையின்றி இசைந்து, ''பள்ளியிலிருந்து அவனை அழைத்து வாருங்கள்'' என்றார்.

அப்படியே அழைத்து வந்து நீராட்டி தாய் பிடித்துக் கொள்ளச் சிறுத்தொண்டர் தலையை அரிந்து, உறுப்புக்களையும் வெவ்வேறு அரிந்து தர வெண்காட்டு நங்கையார் அவற்றைப் பெற்றுச் சமைக்கப் புகுந்தார். தலை கறிக்காகாதென்று தனியே வைத்துவிட்டார். அதனைச் சந்தன நங்கை எடுத்து சமைத்து வைத்தாள்,

சமையல் முடிந்தவுடன் மனைவியார் கூறச் சிறுத்தொண்டர் பைரவரை அழைப்பதற்குத் திருக்கோயிலுக்குச் சென்று அவரை வணங்கி, ''காலந் தாழ்த்ததைப் பொறுத்து இல்லத்துக்கு எழுந்தருளவேண்டும்'' என்றார்.

---

**புண்ணியர்தம் போதம் புகலாம் உலகிற்குத்**
**தண்ணமுத மாயெனையும் தாங்குவதை ஓரேனே.**

அவரை அழைத்துச் சென்று இருக்கை தந்து அவர் திருவடியை நீரால் விளக்கி அந்த நீரைத் தம் தலையின் மேல் தெளித்துக்கொண்டு தீபதூபங்காட்டிப் பூசை செய்து, "எவ்வாறு உணவு படைக்கவேண்டும்?" என்று கேட்டார். "எல்லாவற்றையும் ஒருங்கே படையும்" என்று பைரவர் கூறினார்.

அப்படியே படைத்தபின், "நான் சொன்ன முறைப்படியே நரபசுவை அடித்து எல்லா உறுப்புக்களையும் கொண்டு சமைத்தீரோ?" என்று கேட்டார் பைரவர். தொண்டர் தம் மனைவியார், "தலைக்கறி ஆகாதென்று சமைக்கவில்லை" என்றார்.

"அதையும் நாம் உண்பதுண்டு" என்று அவர் சொல்ல, சிறுத்தொண்டர், இதற்கென் செய்வேன்!' என்று வருந்தும்போது, "நான் அதையும் சமைத்து வைத்தேன்" என்று சந்தன நங்கை சொல்லி எடுத்துத் தந்தாள்.

சிறுத்தொண்டர் முகமலர்ந்து அதையும் படைத்தார். வந்த அடியார், "நாம் தனியே உண்ணுவது இல்லை. ஈசனடியார் யாரேனும் அருகில் நின்றால் அழைத்து வாரும்" என்று சொல்ல, அவர் வெளியே சென்று பார்க்க யாரும் கிடைத்திலர். அதை அவர் பைரவரிடம் சொல்ல, "உம்மை விட வேறு அடியார் யார் உள்ளார். நீர் அமரும்" என்று சொல்ல, அவர் அவ்வாறே அமர்ந்தார். அவருக்கும் கலந்திருத்தி, பைரவர் கூறியவாறே எல்லாக் கறியும் அவர் கலத்தில் இட்டனர் திருவெண்காட்டம்மையார்.

அடியாருக்கு இட்டு உண்பது என் விரதம் என்று பைரவர் சொன்னமையால், அவர் உண்ணவேண்டும் என்பதற்காக, முன்னே சிறுத்தொண்டர் உண்ணத் தொடங்கினார். பாசம், வெறுப்பு, அருவருப்பு, பற்று ஆகிய எல்லாவற்றையும் கடந்து, சிவனடியார் திருவுள்ளம் கூசாமல் ஒழுகவேண்டும் என்ற ஒன்றையன்றி மற்ற யாவற்றையும் மறந்த நிலையில் அவர் இருந்தார்.

அப்போது பைரவர் அவரைத் தடுத்து, "ஆறுமாத மாகப் பட்டினி கிடக்கும் நான் இன்னும் உண்ணாமல்

---

கழிநீர்சார் சாக்கடைபோல் கண்டவுரை விண்டுவரும்
இழிநீரர் நட்பென்னில் இணையா தருளுதியோ.

இருக்க, நாள்தோறும் சோறுண்ணும் நீர் அவசரப்படுகிறீரே! இரும். இன்னும் ஒன்று உண்டு. நீர் மகனைப் பெற்றவராக இருந்தால் அந்தக் குழந்தையையும் அழையும்; சேர்ந்து உண்ணலாம்'' என்று கூறினர்.

சிறுத்தொண்டர் உண்மை கூறத் துணியாதவராய், "அவன் இப்போது உதவான்" என்றார்.

''அவன் வந்தால்தான் நாம் உண்போம். அவனைப் போய்த் தேடி அழைத்து வாரும்" என்றார்.

"இவ்வடியார் அமுது செய்ய எத்தனை தாமதம்!'' என்று கருதிச் சிறுத்தொண்டர் தம் மனைவியாரோடு புறம் போந்து தம் குழந்தையை அழைப்பவரைப் போலப் பாவனை செய்யத் தொடங்கி, "மைந்தா, வா'' என்று அழைத்தார். அவர் மனைவியாரும், ''செய்யமணியே, சீராளா, நாம் உய்யச் சிவனடியார் உடனுண்ண அழைக்கின்றார்; வா அப்பா" என்று உரக்க அழைத்தார்.

என்ன ஆச்சரியம்! இறைவன் திருவருளால் குழந்தை சீராளன் பள்ளிக்கூடத்திலிருந்து ஓடி வருபவனைப்போல வந்தான். அவனை அம்மையார் எடுத்தணைத்துக் கணவர் கையில் கொடுக்க அவர், "அடியார் உண்ணும் பேறு நமக்குக் கிடைக்கும்'' என்ற பேருவகையோடு அவனைக் கையில் வாங்கிக் கொண்டார். தாம் அரிந்த மகன் வந்தானே என்ற வியப்போ, அவன் எவ்வாறு வந்தான் என்ற ஐயமோ அவருக்கு அப்போது தோன்றவில்லை. அடியார் ஏதேனும் காரணங்கூறி அமுது செய்யாமல் போய்விடுவாரோ என்று ஏங்கி நின்ற அவருக்கு, "இப்போது அவர் அமுது செய்வர்'' என்ற நம்பிக்கையும் அதனால் உவகையும் உண்டாயின.

அந்தக் குழந்தையை எடுத்துக்கொண்டு இல்லத்துச் சென்று பார்க்க, அங்கே அடியாரைக் காணவில்லை. பரிகலத்தில் இட்ட கறியையும் காணவில்லை. சிறுத்தொண்டர் ஒன்றும் தெளியாமல் கலங்கி வீழ்ந்து நைந்தார். "ஐயோ! வந்த அடியார் அமுது செய்யாமல் எங்கே போனார்?" எனத் தேடி மயங்கி வெளியே வரும்போது, வானில் இறை

---

தெய்வத் திருவருள்தான் தீரத் தருமென்று
மெய்யா எணுமெனதுள் மேவியிரு மெய்யோனே.

வன் உமாதேவியாரோடும் குழந்தைப் பிரானுகிய முருக ஞேடும் காட்சி அளித்தான். அந்த மூவரையும் அடியாரும் மனைவியாரும் சீராளருமாகிய மூவரும் தொழுது பரவச மாகி ஏத்தினுர்கள். அம்மூவருக்கும் சந்தன நங்கைக்கும் இறைவன் திருவருள் புரிந்து வாழ்வித்தான்.

எல்லாப் பற்றையும் விட்டு அடியாரைப் பேணுவதே பயனென்று அதற்காக இல்வாழ்வில் வாழ்ந்து, மைந்தனை யும் தம் கையால் அரிந்து கறி சமைக்கச் செய்த சிறுத் தொண்டருடைய பக்தியின் முறுகிய நிலையைத் தெளிவது மிக மிக அருமை. புறப்பகையை வென்று புகழ்பெற்ற பொருள் பெரிதென்று அகப்பகையை வென்று நின்ற அவர் இறைவன்பாற் பெற்ற திருவருள் பெரிது.

---

# "காதற்ற ஊசியும் வாராதுகாண் கடைவழிக்கே"

(மா பொ. தியாகராசன் B.A.)

இந்த உபதேச மொழி ஒருபெரிய தனவந்தரை துறவி யாக்கிற்று. "பட்டினத்துப் பிள்ளையைப் போல யாரும் துறக்க அரிது" என்று வழங்கும் ஒரு உண்மைக்குக் காரணம் இந்த உபதேச மொழியே யாகும். இதை நாமும் அநேக முறை படிக்கிறேம். ஆனுல் நமக்கு துறவு உணர்ச்சி ஒரு சிறிதும் ஏற்படவில்லையே. ஏன்? என்று யோசித்தால், சிவபெருமானே வந்து உபதேசித்த காரணத்தால் பட்டினத்தடிகள் மனம் மாறி யிருக்கலாம். என்று தோன்றுகிறது. சரியான குரு கிடைக்கவில்லையே யென்று தம்மை சிர்படுத்திக் கொள்ளாமல் அலைவதே போன்று, நம்மை நாம் மேற்கூறிய காரணத்தால் சமாதானப்படுத்திக் கொள்ளலாம். எனினும் அவ்வுபதேச மொழியை பல

---

ஏழைபங் காளனென எண்ணி நினையடைந்து
வாழுமெனை யந்நெறியே வாழ்வித்தல் செய்வாயே.

முறை சிந்தித்துப் பார்ப்போமேயானுல், ஒரு சிறிதாகிலும் நாம் அதன்பயனைப் பெற முயலுவோமென்று எண்ணியே சிந்தித்த வண்ணம் தோன்றிய சில கருத்துக்களை இங்குக் காணலாம்.

நாம் பெரும்பாலும் இதைப் படிக்கும்போது, செல்வம் நிலையாமை' காரணமாக, தம் செல்வங்கள் அனைத்தையும் பட்டினத்தடிகள் துறந்துவிட்டுச் சென்றதாகக் கருது கிருேம். "செல்வம் நிலையற்றது" "தேகம் அழியக் கூடியது" என்ற பட்டினத்தடிகள் ஏற்கனவே உணர்ந்திருக்க வேண்டும். ஆனுல் இவ்வுபதேச மொழிகள் மூலம் அவருடைய மனத்தை மாற்றிய கருத்து அதுவாகமட்டு மிருத்தல் முடியாது. மற்றும் என்? என்று யோசிக்கும்போது, "காது இல்லாத ஊசியின்வழி நூல் கடைசிவரை செல்லாததுபோல், தன்னுடைய நூலறிவு காதின் வழி உட்சென்று உணர்வைத் தராததால் அது பயனில" என்பதாக எண்ணினுரோ் என்று தோன்றுகிறது. "நூலறிவு படைத்ததன் பயன் வாலறிவன் நற்றுள் தொழ முனையாமல், செல்வமீட்டுதலிலேயே முழுக் காலத்தையும் போக்குகின்ருேம் என்பதை, இவ்வுபதேசமொழி நமக்குணர்த்துகிறதே யென்றெண்ணி, வாலறிவன் நற்றுள்களை நாடி வீட்டை விட்டுப் புறப்பட்டுவிட்டார் போலும் நமது பட்டினத்தடிகள்.

அக்கருத்தை அவ்வுபதேச மொழிகளால் நாமும் உணருவோமாயின், நல்லுரைகளைக் கற்றல் கேட்டலோடு நில்லாமல், அவைகளின்படி ஒழுகப் பழகவேண்டும் என்பதை உணர்வோம். எவ்வளவு படித்த போதிலும், அநுபவத்தில் ஒரு சிறிதும் அவைகளைப் பயன்படுத்த வில்லையெனின், "கற்றதனு லாய பயன் என் கொல்" என்ற பழிக்கே நாம் ஆளாவோம்.

---

பூவுள் மணமும் தேனும்போல் என்றனது
நாவுள் இறைநீயும் தேவியொடு வைகுதியே.

# DIVINITY IN POETRY

Lord Tennyson sang in immortal words the way of god-realisation. Self control, self knowledge and self reverence, these three alone lead life to soverign power; yet not for power; power will come itself uncalled for. This shows that true poetry is inextricably knit with divine experience. There are many animals within the human body, and the first step to spiritual power is to control these animals and become their masters. Some of them are indeed wild. It is a job to deal with them, with discretion and care and subjugate them. This is self control.

The next step is one of self guidance. Guidance comes only from knowledge. One has to engage to know oneself bit by bit. Out of this self examination and scrutiny you become your own guide; for the road each man treads is exclusively his own. There is no companion or fellow pilgrim.

Even as rain water stagnates, then looks about for a depression for a way out and then begins to flow along, the successful pilgrimage of the soul is and cannot but be the achivement of one's own endeavour, practice and understanding.

The effort in all these directions is aided from point to point by the mercy of the Lord within each heart and at last man discovers the Lord of His search within himself. When he sees the Lord within, he sees the Lord everywhere. When this realisation comes, man's object of reverence is found within himself. Self reverence takes hold of him. As all power emanates from God, It draws power from God, who knows to revere Him. Sovereign power comes from the Sovereign God

of the heart. Hence the poet sang. Control the animal within; search and know thyself; realise the Lord within thyself and revere Him there and everywhere. Become a Jivan Muktha. That is true Siva-rajya.

*—Thiruppugal Mani.*

---


## Compliance with Rule 8 of the Registration of Newspapers (Central) Rules 1956

For IV

**AMIRTHAVACHANI**

| | | |
|---|---|---|
| 1. *Place of Publication* | ... | 54, Bunder Street, Madras-1 |
| 2. *Periodicity of its Publication* | ... | Monthly |
| 3. *Name of Printer* | .. | K. V. Jagannathan |
| *Nationality* | ... | Indian |
| *Address* | ... | 91, Mount Road, Madras-18 |
| 4. *Name of Editor* | .. | S. Muthuswami |
| *Nationality* | ... | Indian |
| *Address* | ... | 54, Bunder Street, Madras-1 |
| 5. *Name of Publisher* | .. | S Muthuswami |
| *Nationality* | . | Indian |
| *Address* | .. | 54, Bunder Street, Madras-1 |
| 6. *Name and Address of individuals who own the news papers.* | ... | S. Muthuswami, Sole Proprietor, 54, Bunder Street, Madras-1 |

I. S. Muthuswami, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

*Dated* 
*11th March 1957*

(Sd.) S. MUTHUSWAMI
*Signature of Publisher.*

623

ஓவு நாள், உணர்(வு) அழியும் நாள்,
உயிர் போகும் நாள், உயர் பாடைமேல்
காவு நாள் இவை என்றலால்
கருதேன்; கிளர்புனல் காவிரி
பாவுதண் புனல் வந்திழி பரஞ்
சோதி, பாண்டிக் கொடுமுடி
நாவலா! உனை நான் மறக்கினும்,
சொல்லும் நா நமச்சி வாயவே!

No. 1506
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Regd. M. No. 5390, Amirthavachani (1958 பங்குனி—அமிர்தவசனி

624

**Coffee**
**Ours for Quality**

RAW, ROAST OR GROUND

GANESH & CO., (MADRAS), LTD. MADRAS

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள்
நன்மதிப்புப் பெற்ற நகை வியாபாரிகள்

**சுவர்ண மாளிகை**

A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.
தங்கநகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்
124, தெற்காவணி மூலவீதி - மதுரை
Tel:—"FAITH" Estd:—1924. Phone:—113

## அரிய தெய்வ அருள் நூல்கள்

குக ஸ்ரீ. ரசபதி விரிவுரையுடன்

| | | | |
|---|---|---|---|
| ஸ்ரீ அருணகிரிநாதர் கந்தர் அநுபூதி | 1 | 0 | 0 |
| " 6 திருவகுப்புகள் | 1 | 8 | 0 |
| ஸ்ரீ பகழிக் கூத்தர் திருச்செந்தூர்ப் பிள்ளைத் தமிழ் | 2 | 0 | 0 |
| ஸ்ரீ குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ சேரமான் பெருமாள் திருக்கயிலாய ஞானவுலா | 2 | 0 | 0 |
| ஸ்ரீ ஔவையார் அருளிய விநாயகர் அகவல் | 1 | 8 | 0 |
| திருவெம்பாவை திருப்பாவை திருப்பள்ளி யெழுச்சிகள் | 0 | 6 | 0 |
| திருப்புகழ் மாலை (250 பாடல்கள் மட்டும்) | 0 | 12 | 0 |
| கந்தக் கதம்பம் (பாடல்கள்) பல பிள்ளைத் தமிழுடன் | 1 | 0 | 0 |

தேவி தாஸர்கள் (அற்புத வரலாறு) (அச்சில்)
சிவநேயச் செல்வர்கள் " "
கணபதி பக்தர்கள் " "
முருகனடியார் " "

**அமிர்தவசனி காரியாலயம் 54, பந்தர் தெரு, சென்னை-1**

Printed by K. V. Jagannathan at the National Art Press
91, Mount Road, Madras—18